சித்திரை

[illegible] 8 [illegible] 5

May 1935

3L
R673m2N,N28
N35·8·5
187166

6

Registered No. M. 2330. "SIDDHANTHAM" Vol. 8—No. 5.

OFFICE OF THE REGISTRAR ... 2-JUL 1935 MADRAS

சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

| மலர் அ | யுவ ஆண்டு வைகாசித் திங்கள்<br>1935 ஆம் மேமீ | இதழ் ரு |
|---|---|---|

உள்ளுறை — பக்கம்

கள்வீரே உமகாதலே ... உ௦௯, உ௧௨, உ௧௩
மதமாற்றம் ... ... ... உ௨௧
விசாகம் எப்பொழுது? ... ... உ௨௪
அப்பர் தேவாரம் சரித்திரமுறைப் பதிக அட்டவணை... உ௨௫
சைவமும் தமிழிலக்கியமும் ... ... உ௩௮
சித்தாந்த சாத்திரம் ... உ௨௫ - உ௫௯

ஆசிரியர் :—ம. பாலசுப்பிரமணிய முதலியார், B. A., B. L.
உதவி ஆசிரியர் :—அ. சிதம்பரநாத செட்டியார், B. A.

சைவ சித்தாந்த மகாசமாஜம்
"திருவருளகம்", 22-A, கல்லுக்காரத் தெரு, மயிலாப்பூர், சென்னை.

ஆண்டுச் சந்தா ரூபா 2. 1935 தனிப் பிரதி அணா 4.

உ

சிவமயம்

# தேவார வெளியீடுகள்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் சமாஜத்தின் இரண்டாம் பதிப்பாக இத் தமிழாண்டுத் தொடக்க நன்னாளன்று (14-4-1935) திருமயிலைக் கபாலீச்சரத்தில் திரு. ச. சச்சிதாநந்தம் பிள்ளையவர்கள் தலைமையில் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில் வெளியிடப்பட்டது. திருவாளர்கள் - உலகநாத முதலியார், சண்முகசுந்தர செட்டியார், சோமசுந்தர செட்டியார், சமரபுரி முதலியார், சுந்தர ஓதுவார்மூர்த்திகள் ஆகிய ஐந்து அன்பர்களும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் சரித்திரத்திலும் தேவாரத்திலும் உள்ள பல நுட்பங்களை விளக்கினார்கள்.

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் நமது சமாஜத்தின் இரண்டாம் பதிப்பாகச் சித்திரைச் சதய நன்னாளில் (28-4-35) இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபை நிலையத்தில் ஒரு பொதுக்கூட்டத்தில் வெளியிடப்பட்டது. அன்று மாலை கோவூர் ஸ்ரீ சுந்தரேசுவர சுவாமி தேவஸ்தானத்தில் திரு. ச. சச்சிதாநந்தம் பிள்ளையவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. திரு. வி. உலகநாத முதலியாரும், திரு. வி. கலியாணசுந்தர முதலியாரும் அப்பர் சுவாமிகள் சரித்திரத்திலும் தேவாரத்திலுமுள்ள பல அரிய விஷயங்களை விளக்கினார்கள்.

இவ்விரு வெளியீடுகளின் விலை விவரங்களை மற்றோரிடத்திற் காண்க.

---

## களிமேடு அப்பர் அவை, தஞ்சை

**(சைவ சித்தாந்த சமாஜத்தோடு இணைக்கப்பெற்றது)**

### 7-ம் ஆண்டு விழா

இவ்விழா 28-4-35 ஞாயிற்றுக்கிழமை பகல் 11 மணிக்கு அப்பர் சுவாமிகளுக்குப் பூசையும் 12 மணிக்குமேல் அன்னதானமும் நடைபெற்ற பின்னர், அரியலூர் போர்டு உயர்தரக் கல்லூரித் தமிழாசிரியர் சைவத் திருவாளர் - சரவண முதலியாரவர்கள் தலைமையில் நடந்தேறியது. கடவுள் வணக்கத்தின் பின்னர், திருவாளர்கள் - முசிரி வீ. குமாரவீரையர், தஞ்சை - பா. சிவகுருநாத பிள்ளை ஆகிய பேரறிஞர்களால் முறையே, 'அப்பரின் ஒப்பில் பெருமை', 'தாமே உமக்கு வெளிப்படும்' என்பனபற்றிச் சொற்பொழிவுகள் அமிழ்தி

gistered No. M. 2330

2 - JUL 1935
MADRAS

# சித்தாந்தம்

" ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானதரு வாணியை உள்நாடு "

| | | |
|---|---|---|
| மலர் அ | யுவ ஆண்டு வைகாசித் திங்கள் 1935ஆம் மேமீ | இதழ் ரு |

## கள்வீரே உமகாதலே

### I

[மா. வே. நெல்லையப்ப பிள்ளை]

**உள்வேர் போல நொடிமையி னார்திறம்**
**கொள்வீ ரல்கு லோர்கோ வணம்**
**ஒள்வா ழைக்கனி தேன்சொரி ஒத்தூர்**
**கள்வீரோ யும காதலே.**

(பதவுரை) ஒள்வாழைக்கனி தேன்சொரி - அழகான வாழைக் கனிகள் தேனினைச் சொரிகின்ற வளப்பமுடைய ; ஒத்தூர் கள்வீரே - திருவோத்தூர் என்ற பதியில் திருக்கோயில்கொண் டெழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானே ; அல்குல் ஓர் கோவணம் - அரையில் ஒரு கோவண ஆடை தரித்த வேடங்கொண்டு (மனைதோறும்போய்ப் பலிகேட்கும் பொழுது); நொடிமையினார் திறம் கொள்வீர் - (பலியிடுதற்கு வந்த) இன்மொழி பேசுகின்ற மகளிருடைய உள்ளத்தைக் கொள்ளை கொண்டு உம்வசமாக்க வல்லீராவீர் ; உமகாதல் -

(ஆதலினால் உயிர்கள் உய்யும்பொருட்டு அவைகள் மேல் வைத்த பேரருளினால்) நீர் செய்துவரும் அன்புச் செயல்கள் ; உள்வேர்போல (உள்ளன) - மண்ணுக்குள் மறைந்திருக்கும் ஒரு மரத்தினுடைய வேர்களானவை அது நிலைபெறநின்று செழித்து வளர்ந்து பயன்தருதற்குக் காரணமாயிருத்தல்போல உயிர்களுடைய இகபரவாழ்வு நிலையாய் வளர்ந்தோங்கி இன்பம் பயத்தற்குக் காரணமாயுள்ளன. "அத்தகைய பேரருளும் பேராற்றலுமுடைய உமக்கு திருவோத்தூர்ச் சிவத்தொண்டர் வளர்த்த ஆண் பனைகளைப் பெண் பனைகளாக மாறச்செய்வது ஒரு பொருட்டோ?" என்பது குறிப்பெச்சம்.

(விளக்கவுரை) திருஞானசம்பந்த அடிகள் திருவோத்தூர் சென்றிருந்தபொழுது அங்கேயுள்ள தொண்டர் ஒருவர் தாம் சிவபெருமானுக்கென விதைத்த பனங்கொட்டைகளெல்லாம் ஆண் பனைகளாக ஓங்கி வளர்ந்திருக்கின்றன என்றும் அதனைக் கண்ட சமணர்கள் எள்ளி நகையாடுகிறார்களென்றும் அவரிடம் சொல்லினர். அதனைக்கேட்ட திருஞானசம்பந்த அடிகள் ஆண் பனைகளெல்லாம் பெண் பனைகளாக மாறிக் காய்க்கும்படி பாடிய பதிகப் பாட்டுகளில் இந்தப் பாட்டு மூன்றாவது பாட்டு. இப்பாட்டு அகப்பொருட்டுறையிற் பாடப்பட்டது. கள்வீரே - சிவபெருமானே தாம் உயிர்கள் பொருட்டுச் செய்யும் அருட்செயல்களை அகக்கண்ணில்லாத மாந்தர் அறியாதிருக்கும்படி மறைவாய்ச் செய்தலால் அடிகள் அவரைக் 'கள்வர்' என்றார். அல்குல் ஓர் கோவணம் - இது பலிகேட்கும்பொழுது சிவபெருமான் தரிக்கும் வேடம். சிவபெருமான் பலி ஏற்பதும் தாம் உண்பதற்கன்று ; இதனை அடிகள் திரு இலம்பையங்கோட்டூர் பதிகம் 6-வது பாட்டில் "மனமுலா மடியவர்கட் கருள்புரிகின்ற

37106



வகையலால் பலிதிரிந்துண்பிலான்" என்று கூறியருளினர். திருமந்திரம் 1888-வது பாட்டுக் கருத்தையும் நோக்குக. கோவண ஆடை பொருட்பற்று இன்மையையும் பலி ஏற்கும் பிரமன் தலையோடு உயிர்ப்பற்று ஆகிய அகந்தையின்மையையும் அடியார்களுக்கு எடுத்துக்காட்டும் அடையாளங்களாயுள்ளன. சிவபெருமான் பலி ஏற்பதும் தம்பொருட்டாக அல்லாமல் அடியார்கள் பொருட்டாகச் செய்யப்படுதலால் அடிகள் அவரைக் 'கள்வர்' என்று கூறியருளினர். நொடியினார் - இதனை நொடி, மையினார் என்ற இரண்டு சொற்களாகப் பிரித்துப் பொருள் கொள்ளினும் பொருந்தும். நொடி - கால நுட்பம். மையினார் - மை தீட்டிய கண்களையுடைய மகளிர். திறம்கொள்வீர் - திறம் என்பது உள்ளத்திறன். திறம் கொள்ளுதலாவது - மகளிர் உள்ளத்தை தம் வயப்பட்டு நிற்கும்படி செய்தல். அடிகள் 'தோடுடைய செவியன்' என்ற பாட்டில் 'உள்ளம் கவர்கள்வன்' என்றார். உலகத்தை நிலையில்லாதது எனக்கண்டுணர்ந்து சிவத்தை மெய்ப்பொருள் எனக் கண்டொழுகும் பருவத்திலுள்ள அடியார்களைச் சிவபெருமான் தம்வயப்பட்டொழுகும்படி செய்கின்றார் என்பது கருத்து. உமகாதல் - காதல் என்பது அன்பு. இங்கே அது அன்பினாற் செய்யப்படும் செயல்களைக் குறிக்கிறது. உயிர்கள் தமது தாள்நிழல் அடைந்து இன்புறும்படி சிவபெருமான் செய்யும் செயல்கள் எல்லாம் அன்புச் செயல்களாகும். அவை படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்ற ஐந்து தொழில்களில் அடங்கும். உள்வேர்போல - இதற்குப்பின் உள்ளன என்ற சொல் அவாய் நிலையில் தொக்கி நிற்கிறது. காதல் உள்வேர்போல் உள்ளன என்று உரைநடை செய்க. காதல் - எழுவாய். உள்ளன - தோன்றாத பயனிலை. காதல் சாதி ஒருமைப் பெயராக

அன்புச் செயல்களைக் குறித்தலால் உள்ளன என்றும் பன்மை வினைமுற்றைப் பயனிலையாகக் கொண்டது. உள்வேர் - மரத்தினது அடியில் மண்ணினுள்ளே மறைந்திருக்கும் வேர்கள். அவ்வேர்களையன்றி மரம் நில்லாததுபோலச் சிவபெருமானுடைய அன்புச் செயல்களையன்றி உயிர்கள் வாழா என்பது இவ்வுவமத்தாற் போந்த பொருள். "என் வாழ் முதலாகிய பொருளே" என்று மாணிக்கவாசக அடிகள் திருப்பள்ளியெழுச்சி முதலாவது பாட்டிலும், "என் வாழ்முதலே" என்று நக்கீரதேவ நாயனார் தமது கைலைபாதி காளத்திபாதி அந்தாதி 54-வது பாட்டிலும் கூறியருளினமை காண்க. We live, move and have our being in him (God) என்பது ஆங்கில மொழி.

---

## II

[அ. சோமசுந்தரம் செட்டியார், எம். ஏ.]

**தேன்சோரி ஒள்வாழைக்கனி ஒத்தூர் அல்குலோர் கோவணம் கள்வீரே, உள்வேர்போல நோடிமையி னூர்திறம் கோள்வீர், உம காதலே**—உரைநடை.

தேன்சொரி ஒள் வாழைக்கனி ஒத்தூர் - தேனைச் சொரிவதுபோல மதுரம் பொருந்திய வாழைக் கனிகள் மிகுதியாயுள்ள திருவோத்தூர் என்னும் தலத்தில் கோயில்கொண்டு எழுந்தருளியுள்ள; அல்குலோர் கோவணம் கள்வீரே - அரையிற் கட்டிய கோவணத்தையுடைய (உள்ளம் கவர்) கள்வரே, அல்லது அரையிற் கட்டும்படியான கோவணத்தை அமர்நீதி நாயனாரிடம் கவர்ந்த கள்வரே; உள்வேர்போல - உள்வேரானது பிறர் அறியாதபடி உறுதியான கருங்கல் கட்டடத்தையும் தகர்த்தெறிவதுபோல; நொடிமையினார் திறம் கொள்வீர் - க்ஷணத்திற் குணம் மாறுபடும்படியான இயல்பையுடைய (Fickle minded) மகளிரின் நிறை முதலிய குணங்களைக் கொள்ளைகொண்டு உம்முடைய வயமாக்கும்படியான தன்மையுடையவரா யிருக்கின்றீர்; உமகாதலே - இதுவும் நீர் ஆன்மாக்கள்மீது வைத்த கருணைச் செயலேயன்றி வேறல்ல. அகப்பொருள் துறையிற் சொல்லப்பட்டது. அமர்நீதி நாயனார் காலம் அப்பர் சம்பந்தருக்கு முந்திய காலமானதால், இறைவன் அவரிடம் கோவணம் கவர்ந்த சரித்திரம் குறித்தல் கூடும்.



நாட்கொண்ட தாமரைப்பூத் தடஞ்சூழ்ந்த நல்லூர்க்கே
கீட்கொண்ட கோவணங் காவென்று சொல்லிக் கிறிபடத்தான்
வாட்கொண்ட நோக்கி மனைவியொடு மங்கோர் வாணிகனை
ஆட்கொண்ட வார்த்தை யுரைக்கு மன்றோஇவ் வகலிடமே.

—**அப்பர் தேவாரம் - திருநல்லூர் - திருவிருத்தம் - எ - கசஅ**

---

## III

[ம. வி. இராகவையங்கார், பாராசூர்]

நம் "சித்தாந்தம்" பங்குனி மாத இதழின்கண் திருவோத்தூர்த் தேவாரத் திருப்பதிகத்து மூன்றும் பாசுரமாகிய,

**"உள்வேர் போல நொடிமையி னார்திறம்**
**கோள்வீர் அல்குலோர் கோவணம்**
**ஒள்வா ழைக்கனி தேன்சோரி ஒத்தூர்க்**
**கள்வீரே! யும காதலே"**

என்ற பாசுரத்திற்குக் "கள்வீரே! உமகாதலே" என்ற தலைப்பின் கீழ் அரிய உரையொன்று பத்திராசிரியரால் எழுதப்பட்டுள்ளது கண்டு மிக்க மகிழ்வெய்தினேன். அவர் அதன்கண் அப்பாசுரத்திற்கு அறிஞர்கள் கூறும் பல வுரை விகற்பங்களையும் எடுத்துக்காட்டிப், பின்னர், தமது உரையை

எழுதி விளக்கியுள்ளார். அதனைக் கண்டதும் யான் பத்திராசிரியர் எழுதியுள்ள உரையையும், திருவோத்தூர்த் தேவாரத் திருப்பதிக வுரைநூலையும் பல முறையும் படித்து நோக்கினேன். அதன் பயனாக எனக்குப் பல ஐயங்கள் ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றின. அவற்றை வெளியிடின், அஃது உண்மைப் பொருள் காண்பதற்குத் துணையாகுமென்று கருதுகின்றேன். பத்திராசிரியரையும் இக்கட்டுரையை அன்பு கூர்ந்து வெளியிட வேண்டுகின்றேன்.

அப்பாசுரத்திற்குப் பத்திராசிரியர், "ஒள்வாழைக்கனி தேன் சொரி ஓத்தூர் கள்வீரே! நொடிமையினார் திறம் அல்குலோர் கோவணம் உள்வேர் போலக் கொள்வீர், உம காதலே" என்று அந்நுவயித்துக் கொண்டு, "ஒளிமிக்க வாழைக்கனிதேன் சொரிகின்ற (வளம் பொருந்திய) திருவோத்தூரில் (கோயில் கொண்டுள்ள) கள்வரே! இனிய மொழிபகரும் உமாதேவியாருடைய பக்கலில் இருந்து கொண்டே அவ்வம்மையார் மீது உள்வெகுளி (கோண்டவர்) போல(ப் பாசாங்கு செய்து, அவ்வம்மையார் பக்கலில் அமர்ந்திருக்கும் அமைப்புக்கேற்ற போகவேடங் கொள்ளாது யோக வேடத்தைக் குறிக்கும்) ஒரு கோவணத்தை அரையிற் கொண்டுள்ளீர்! உமது (உண்மையான) காதல் எத்தன்மையது" என்று உரை கூறியிருக்கின்றனர்.

இவ்வுரை நொடிமையினார் என்ற தொடருக்கு இனிய மொழி பகரும் உமாதேவியார் என்றும், உள்வேர் போல என்பதற்கு உள்வெகுளி கோண்டவர்போல என்றும் பொருள் கூறுகின்றது. வேர் என்பது வெகுளிப் பொருட்டாதல், திருக்குறளாலும், சுவாமிகள் அருளிய தேவாரத்தாலும் வலியுறுத்தப்பட்டுளது. இஃது ஒப்புக்கொள்ளக் கூடியதேயாயினும் உள்வேர்போல என்ற தொடர் உள்வெகுளி கொண்டவர் போல எனப் பொருள் தருதல் இயல்பாகப் பொருந்துவதாகத் தோன்றவில்லை. இவ்வாறு வரும் என்பதற்கு ஆதாரமும் கூறப்படவில்லை. இனி, தேனுறும்மொழி யினையுடையாள் என்பது தேமொழி எனத் தொகைச் சொல்லாய் வருவது போல, உள்ளத்தே வேர்ப்பினையுடையார் என்பது உள்வேர் என வந்தது என்று கொள்ளின், அவ்வாறு தொகைச் சொல்லை வழங்குதல், அது விரிந்து நிற்கும் நிலையில் வழங்க இயலா இடங்களிலேதான் உண்டு. இங்கே, உள்ளே வேர்ப்பினையுடையார் என்பது சுவாமிகள் கருத்தாயின் உள்வேர்ப்பார்போல் எனத் தம் கருத்து இனிது புலப்படக் கூறியிருப்பர். அதனால் ஓசை, வண்ணம் ஆகிய இவையுங் குன்றா; தாளமும் பிழைபடாது; பொருள் மயக்கமும் எய்தாது அன்றோ? அங்ஙனம் அருளாமையின், அத்தொடர்க்குப் பத்திராசிரியர் கூறும் பொருள் சுவாமிகட்குக் கருத்தாகுமா என்பது எனக்குண்டாகும் ஐயம்.



உள்வேர் போலக் கொள்வீர் என்பதற்கு "உள்வெகுளி கொண்டவர் போலப் பாசாங்கு செய்து அவ்வம்மையார் பக்கலில் அமர்ந்திருக்கும் அமைப்புக்கேற்ற போகவேடங் கொள்ளாது போகவேடத்தைக் குறிக்கும் (ஒரு கோவணத்தை அரையில்) கொள்வீர்" எனத் தாம் கருதிய பொருள் தோன்றப் பல சொற்களை வருவித்து உரை கூறுவது பொருந்துமா என்பது மற்றோர் ஐயம்.

நொடிமையினார் என்பதற்கு இனிய மொழி பகரும் உமாதேவியார் என்று பொருள் கூறுகின்றார். இது பொருளாயின், "இளமுலையாளையோர் புடையீரே" என இரண்டாம் பாசுரத்திற் கூறியவாறே சிறப்பித்துக் கூறாது பொதுப்படக் கூறியதன் கருத்து என்ன? உமாதேவியாரைக் கூறுந்தோறும் பால்காட்டும் எழுத்தமைத்து, "இழைத்த இடையாள் உமையாள்" என்றும், "கோட்டமே கமழும் குழலாளொடு கூடினை" என்றும், "இளமுலை யாளையோர் புடை

யீரே " என்றும் அவரது ஒருமைச் சிறப்புத் தோன்றப் பலவிடத்திலும் கூறிய சுவாமிகள், இப்பாசுரத்தில் இவ்வாறு கூறுவானேன் என்று ஐயுறுகின்றேன்.

யோகம் செய்வார் வெகுளியை உள்ளத்தால் உள்ளலும் ஆகாதென்றும், உள்ளின் அதனால் அவ் யோகத்திற்குரிய இன்றியமையாச் சிறப்பிற்றாய அருளுடைமை கெட்டு, தவமும் யோகமும் பயன்படாவாம் என்றும் பெரியோர் கூறுவர். அருளே யுருவாகவுடைய பரமனை உள்வெகுளி கொண்டார் போலக் கூறுதல் பொருந்துமா? அவர்க்கு எக்காலத்தும் உள்வெகுளியில்லை யென்பது தொண்டர் புராணம் முதலிய சைவ நூல்கள் எல்லாவற்றுள்ளும் கண்டதாகும். ஒன்று கூறுவேன்: "யான் தந்த ஓட்டை நீ கவர்ந்து கொள்ளவில்லை என்பதை உன் மகனைப் பற்றிக்கொண்டு குளத்தில் மூழ்கிச் சத்தியம் செய்" என்று பரமன் கூறியபொழுது அவ்வுரை வெகுளிக் கூறியதுபோல் தோன்றினும், பரமனுக்கு உள்ளத்தே வெகுளியில்லை யென்பதை வலியுறுத்த வேண்டி, சேக்கிழார் சுவாமிகள், காதலுன் மகனைப் பற்றிக் குளத்தினில் மூழ்கிப் போவென்(று) அருளினன் கோடுமை யில்லான் " என்றவிடத்து, " கோடுமை யில்லான் " என அறுதியிட்டுக் கூறினார்.

" உள்வேர் போல என்பதனால் உண்மையில் உள் வெகுளி யில்லையென்பதாயிற்று " என்கின்றார். அவர்க்கு உண்மையில் உள்வெகுளி யில்லையெனில், இல்லாதானை வெகுண்டவர்போல என்று கூறுவது குற்றமன்றோ?

"நொடிமையினார் திறம் அமர்ந்திருத்தலால் புறவெகுளியும் இல்லை. ஏனெனில், புறவெகுளியுண்டேல் அவ்வாறு (தேவியாரோடு) அமர்தல் இயல்பாகாது" என்று நமது பத்திராசிரியர் கூறுகின்றார். இவர் இப்பாசுரத்திற்குக் கூறியுள்ள பொருள் நெறியே நோக்கின், நொடிமையினார் திறம் அமர்



தல் உள்வெகுளியில்லை யென்பதற்கும், யோக வேடத்தைக் குறிக்கும் கோவணம் கொள்ளுதல் போக வேடத்தைத் துறத்தற்குரிய புறவெகுளியுண்டென்பதற்கும் ஏதுவாகுமேயன்றி, இவர் கூறியதுபோல, மாறி நிற்கும் என்பது பொருந்துமா?

இருவகை வெகுளியும்* இல்வழித் தவக்கோலங் கொண்டமைக்குக் காரணம் உயிர்களிடத்து அவர்க்குண்டாகிய காதலேயாகும். அத்தகைய காதலைத் தேவியார்பால் ஏற்றுதல் சிறப்பாகுமா? சிறக்குமாயின், அவர் தவக்கோலங் கொண்டதற்குக் காரணம் யாது? "அத்தகைய தவக்கோலம் கொண்டது திருவிளையாடலே" என்று ஆசிரியர் கூறுகின்றார். இதனால் பரமனுக்குத் தேவிபாலுள்ள காதல்பற்றி இத்திருவிளையாடல் நிகழ்வதாகத் தோன்றுகிறது. மேலும், பரமன் புரியும் திருவிளையாடல் யாவும் ஆன்மாக்கட்குப் பரம வுபகாரமாகக்கூடிய திருவருட் செயல்களே யென்பது அறிஞர் அனைவரும் ஒப்புக்கொண்ட பொருள். இத்திருவிளையாடலால் அத்தகைய பயனொன்றும் இங்கே கூறப்படாமையின், நம்மனோர் புரியும் பயனில் விளையாட்டோடு நினைத்து ஒப்பவைத்துக் கூறியவாறாம். அவ்வாறு கூறுதல் பொருந்தாதல்லவா? இப்பொருள் நெறி நிந்தாஸ்துதி முறையெனப் பத்திராசிரியர் கருதுகின்றார். இஃது எவ்வகையில் நிந்தாஸ்துதி முறையாகும்?

"ஒள்வாழைக்கனி தேன் சொரிதலால் உள் வெகுளி உண்மையில் இல்லை. ஏனெனில், சத்தியும் சிவமும் வெகுண்டால் (பிரிந்தால்) உலக இன்ப நுகர்ச்சியும், இயற்கைப் பொருளின் இன்ப நுகர்ச்சியாகிய வாழைக்கனி முற்றித்

---

*துறத்தல் என்னும் பொருள் தோன்ற வெகுளியென்னும் சொல்லை ஆளுகின்றாராகையால், அப்பொருளிலேயே அச்சொல் இக்கட்டுரையிலும் வழங்கப்படுகின்றது.

"தேன் சொரிதல் முதலிய நிகழ்ச்சிகளும் இல்லாமற்போகும்" என்று பத்திராசிரியர் கூறுகின்றார். "ஒள்வாழைக்கனி தேன் சொரி ஓத்தூர்" என்பதில் வாழைக்கனி தேன் சொரிதல் என்ற விசேஷணம் ஓத்தூரைச் சிறப்பிக்க வந்ததேயன்றி, உள் வெகுளியில்லை யென்பதைச் சாதிப்பதற்கு வந்த ஏது அன்று என்பது அப்பாசுரத்தை ஒருகால் படிப்பார்க்கும் எளிதில் புலப்படக்கூடியது. சிவமும் சத்தியும் தாதான்மியத்தான் இருதிறப்படினும் சைதன்னிய நிலையில் ஒன்றேயாம் எனவும், இருதிறப்பட்டு ஞாயிறும் ஒளியும் போல இயைந்து குணகுணியாய் நிற்குமெனவும் ஸ்ரீமாதவச் சிவஞானயோகிகள் முதலிய பெரியார்கள் கூறுவர். கூறவே, அச்சிவசத்திகளைப் பிரித்து உரைத்தலும், இவற்றிற் கிடையே வெகுளியுண்டு இல்லையென்பன போன்ற வாய்பாடுகளை வழங்குவதும் குற்றமல்லவா?

"இனியமொழி பகரும் அம்மையார் பக்கத்திலிருந்தும், வெகுளியில் வழியும் யோகக் கோலம் கொண்டமையால் கள்வீர் என விளிக்கப்பட்டார். அவர் காதலும் வியத்தற்குரிய காதலாயிற்று" என்று பத்திராசிரியர் கூறுகின்றார். இதனாலும், அம்மையார் பக்கத்திலிருந்து, வெகுளியின்றிப் போகக் கோலம் கொள்வதே பரமன் செய்யவேண்டுவதென்பதும், யோகக்கோலம் கொண்டது கள்வர்க்குரியதென்பதும், அவ்வாறு கொண்டதற்குக் காரணம் தேவிபால் அவர்க்கிருக்கும் காதலென்பதும் பத்திராசிரியர் கருத்தென்பது விளங்குகின்றது. ஆகவே, போகவேடம் கோடற்குரியவன், தேவியினிடம் தனக்குள்ள காதல்பற்றி யோக வேடம் பூண்டதனால், அவ்வேடம் பொய்வேடம் எனப்பட்டு, "நல்ல போகத்தன் யோகத்தையே புரிந்தானே" என்று அவர் காட்டிய மேற்கோளுக்கு மாறாய் முடிவதனால் அவருடைய உண்மைக் கருத்து யாதோ?



பின்பு, "நல்லூர்ப் பெருமணத்தான் நல்ல, யோகத்தன் யோகத்தையே புரிந்தானே" என்றும், "மங்கையோடிருந்தே யோகு செய்வானை" என்றும் வரும் திருவாக்குக்களைக் காட்டி, இவற்றின் கருத்து இப்பாசுரக் கருத்து என்கின்றார். திருவோத்தூர்த் தேவாரத் திருப்பதிகத்துக்கு உரையெழுதிய திரு. ஔவை சு. துரைசாமிப் பிள்ளையவர்கள் "இடையீர்போகா" என்று தொடங்கும் இரண்டாம் பாசுரவுரையின்கண், "இனி; பரமன் தேவியுடன் கூடிப் பிரிப்பின்றி நின்று சிவானந்தப் பெரும் போகத்திலே யிருக்கின்றானெனினும் ஆன்மாக்கள் அப்போகத்தின் உண்மை யுணர்ந்து அதனைப் பெறுவதற்குரிய மார்க்கத்தை அறிவிக்கக் கருதி யோகிகட்குரியமான் தோலுடுத்து யோகியாய் இருந்து காட்டும் இயல்பினை இயல்பாகவே யுடையவன் என்று நாம் உணருமாறு, சுவாமிகள் பரமனை நோக்கி "புள்ளிமானுரியுடையீர்" என்றார். இக்கருத்து, "நல்லூர்ப் பெருமணத்தான் நல்ல போகத்தன் யோகத்தையே புரிந்தானே" யென்றும், ஒருத்திபால் பொருத்திவைத் துடம்புவிட்டு யோகியாய், இருத்தி" என்றும் வருவனவற்றாலறிக என்று கூறியுள்ளார். மேலும், "இளமுலையாளை யோர்புடையீர் என்று இரண்டாம் பாசுரத்திற் கூறியதனால் "புறவெகுளி"யின்மையும், "இடையீர் போகா இளமுலையாள்" எனத் தேவியார் சிறப்பிக்கப்பட்டிருத்தலின் போக முண்மையும் தோன்றுகின்றன. "மானுரியுடையீரே" என்றும், "சடையீரே" என்றும் அப்பாசுரத்தே கூறியிருத்தலால், பரமன் போகத்தோடு யோகமும் உடையவன் என்பது இனிது பெறப்படுகின்றது. எளிதில் விளங்கித் தோன்றும் இப்பாசுரக் கருத்தைப் பத்திராசிரியர் குறிப்பாகக் கூறப்பட்டிருக்கிறதென்று கூறுவதும், இப்பாசுரத்தில் அக்கருத்து இல்லையாயினும் இருப்பதாகப் புகுத்திக் கூறுவதும் பொருந்துமா?

இப்பாசுரத்தில் "கள்வீர்," "போல," "காதலே" என்ற சொற்களிற் பொதிந்து கிடக்கும் நுட்பம் இயல்பாகப் பொருந்தாமையும், மூன்றுமடி இயற்கை வருணனையாக மட்டும் நிற்கும் தன்மையும் மேற்கூறிய மற்ற உரைகளிற் காணப்படுகின்றன," என்று பத்திராசிரியர் கூறுகின்றார். இங்குக் காட்டிய சொற்களுக்குப் பிள்ளையவர்கள் காட்டியுள்ள நுட்பங்களைப் படிக்குமிடத்து, அவை இயல்பாகவே பொருந்துவனவாகப் படிப்போர் மனத்தை வசீகரித்துவிடுவதால் பத்திராசிரியர் அவர்கள், அவர் காட்டிய நுட்பங்களையும் அவை இயல்பாகப் பொருந்தாதிருக்கும் வகையினையும் பிறவற்றையும் எடுத்துக் காட்டுமாறு வேண்டுகின்றேன்.

இனி, இத்திருப்பதிகத்திற்கு உரையெழுதிய திரு. பிள்ளையவர்கள், "நொடிமையினார் திறம் அல்குலில் ஓர் கோவணம் (கொண்டு,) உள்வேர்போலச் (சென்று) பலிகொள்வீர் !" என்று உரைநடை கொண்டு, "மேமேல கோள்வீர் என வந்ததற்கேற்பக் கோண்டு என்பதும், கொள்ளுதற்குரிய பொருளாதலால் பலி என்பதும் வருவிக்கப்பட்டன" என்றுங் கூறி, "வெடியவினை கொடியர்கெட விடுகில்பலி நொடிய மகிழடிகள்" (கயி - 4) என்பது, நொடிமையென்னுஞ் சொல்லுக்குக் காட்டப்படும் பிரமாணம். இதன்கண்ணும் நொடிதற்குரியது பலியே என்றற்கு "சில்பலி நொடிய" என்றே சுவாமிகள் கூறியருளினாராகையாலும், அவரிடத்தே பெறற்குரியதாவது பலியாதலாலும், நொடிமையினார் என்பதற்குப் பலி பெறுதற்குரிய தன்மை யுடையவர் என்றும், கோள்வீர் என்பதற்குப் பலி பெறுவீர் என்றுங் கூறினும்" என்று கூறியுள்ளார். மேலும் அவர், "உள்வேர்போல" என்றது, "மண்ணுட் செல்லும் வேர் புகுதற்கரியவிடத்தும் புகுந்து, அங்குத் தனக்குரிய பொருளைக் கொள்ளுதல்போல, விள்ளுதற்கரிய அறியாமையும் திட்பமும் உடைய மனமுடையவரிடத்தும்



சென்று அவர் பலிதர," பெறும் பரமனது தொழிலினையு காட்டவந்த தொழிலுவமம் என்றுங் கூறுகின்றார். இங்ஙனம் ஏற்புடைய சொற்களைப் பெய்துரைத்தும், திரு. பிள்ளையவர்கள், "இக்கூறியவாற்றால் யாம் கூறிய வுரையே மெய்ம்மையுரையென்கின்றேமல்லேம்; ஆயினும், இவற்றைச் சீர்தூக்கிக் காணும் அறிவுடைப் பெருமக்கள் உண்மை தெளிந்து கூறுவாராயின், அதனை ஏற்றுக் கொள்வதேயன்றி, அவர்க்கு ஏழுமையும் கடப்பாடுடையேம் என்பதனை இதனால் மிக்க பணிவுடன் தெரிவித்துக்கொள்ளுகின்றேம்" என்று கூறுவதனால், அவர், தம்முரையின்கண்ணும் அமைதி எய்தினாரில்லை யென்பது தோன்றுதலின் அவர் கருத்து யாதோ?

ஆகவே, இப்பாசுர வுரைக்கண் யான் காட்டிய இவ்வையப் பாடுகளை நீக்கித் தெளிவிக்குமாறு அறிஞர் பெருமக்களை வேண்டுகிறேன்.

# மத மாற்றம்

[சைவத் தோண்டன்]

நம் சைவ சமயத்திலிருந்து பல்லாயிரக் கணக்கான மக்கள் பிற சமயங்களில் சேர்வதைக் கண்டும், நாம் பிற மதங்களிலிருந்து நம்மதத்தில் சேர விரும்புவோரைச் சேர்த்துக்கொள்ள முயற்சி செய்யாமல் உறங்கிக்கொண்டிருப்பது ஒரு பெருந்தவறாகும்.

நாம் நம் சமயத்திலிருந்து புறச்சமயத்தில் புகுந்த ஒருவர் திரும்பவும் நம் சமயத்தில் சேர முயற்சித்தால், சேர்த்துக்கொள்வதில்லை. சேர்ந்தாலும் அத்தகையோரை இழிவுபடுத்துவதனாலேயே புறச்சமயிகள் நம் சமயத்திலுள்ளோரில் பலரைத் தங்கள் சமயத்தில் சேர்த்துக்கொள்ள அனுகூலமாக இருக்கிறது.

நம் சைவ சமயாசாரியர்களாகிய மாணிக்கவாசகர், சம்பந்தர் முதலியோர் செய்துவந்த முக்கியமான பணியாகிய பிற சமயிகளைத் தம் சமயத்தில் சேர்க்கும் தொண்டினை நாம் ஏற்றுக்கொள்ள முற்படாததால் நம் சமயத்திலுள்ளோரின் எண்ணிக்கை நாளுக்குநாள் குறைவாகின்றது. பிற சமயத்திலிருந்து நம் சமயத்தில் சேர்வோரை இழிவாகக் கருதுவது நம் சமயாச்சாரியாராகிய திருநாவுக்கரசர் போன்றாரை இழிவுபடுத்துவதாகும் என்பதை சைவ மக்கள் உணர வேண்டும்.

நாம் சமயத்திலுள்ளோர்களின் எண்ணிக்கையை மிகுதிப்படுத்த முயற்சிப்போமாயின் நாம் செய்யவேண்டிய கடமைகள் பலவுள.

(1) ஆதித்திராவிடர்களையும் தாழ்ந்தோர்களென்று கருதப்படும் பிற சாதியினரையும் கொடுமைப்படுத்தக் கூடாது. அவர்கள் சைவ சமயத்தைச் சார்ந்தவர்களென்று கருதாது, நம் சமயத்திற்குப் புறம்பானவர்கள்போல் கருதி, அவர்களை ஆலயத்திற்குள் விடாமலும், சம உரிமைகளை வழங்காமலும் இருப்பதைக்கொண்டு, அவர்கள் புறச்சமயங்களில் சேர்ந்துகொள்ளவேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. ஆகவே, அவர்களுக்கு சம உரிமை வழங்குவதால், நம் சமயம் முன்னேற்றம் அடையுமென்பது திண்ணம்.

(2) சைவக் கல்லூரி ஒன்று ஏற்படுத்த வேண்டும். இக்கல்லூரியில், பன்னிரு திருமுறைகள், பதினான்கு சாத்திரங்கள் முதலிய நம் சைவசித்தாந்த உண்மைகளைப் பயிற்றுவிக்கவேண்டும். குறிப்பிட்ட கால எல்லைக்குள் நம் சமயத்தின் முக்கியமான கொள்கைகளைப் பயிற்றுவித்தபின், ஓர் தேர்ச்சி நடத்தி அதில் தேறினவர்களுக்குப் பட்டங்கள் வழங்கவேண்டும். தேவாரம் திருவாசகம் முதலியவற்றை இன்னிசையோடு பயிற்றுவிக்க இன்னிசைக் கல்லூரி ஒன்றும் ஏற்படுத்த வேண்டும். இதிலும் தேர்ச்சி நடத்தி, தேறினவர்களுக்குத் தேறினதாக பத்திரங்கள் (Certificates) வழங்கவேண்டும்.



(3) இத்தகைய பட்டங்கள் பெற்றவர்களும், இன்னிசைப் பயிற்சி பெற்றவர்களும் தனித்தனி உடைகள் அணிய வேண்டும். இவர்களைக்கொண்ட தொண்டர் படை ஏற்படுத்த வேண்டும். இவர்கள் "இரட்சண்ய சேனை" (Salvation army) போன்று நம் சமயக் கொள்கைகளை நாடெங்கும் பரவச் செய்யவேண்டும். தொண்டர்படை உறுப்பினர்கள் ஒரே விதமாக உடை அணியவேண்டும்.

(4) சைவக் கல்லூரியிலும், இன்னிசைக் கல்லூரியிலும் சைவ மங்கையர்களையும் பயிற்றுவித்து சைவ மங்கையர் தொண்டர் படை ஒன்றும் ஏற்படுத்தவேண்டும். இவர்கள் வீடுதோறும் சென்று பெண்மக்களிடையே சைவத்தைப் பரவச் செய்யவேண்டியது இன்றியமையாதது.

(5) சைவம், நம் நாட்டின் பல பாகங்களிலும், பிற நாடுகளிலும் பரவுவதற்கு ஆங்கிலப் புலமையுடைய தொண்டர்களைக் கொண்டு ஆங்கிலத்தில் சொற்பொழிவாற்றுமாறு செய்யவேண்டும்.

(6) சைவத் திருமுறைகளையும், சாத்திரங்களையும் அச்சிட்டு, இலவசமாகவும், குறைந்த விலைக்கும், எல்லா மதத்தினருக்கும் வழங்கி அவர்களைப் படிக்குமாறு செய்யவேண்டும்.

(7) சைவமக்களில் பெரும்பாலோர் மாமிச உணவுகளையும் உட்கொள்வதால், சைவ சமயத்தில் சேர்வதற்கு மரக்கறி உணவு உட்கொள்ளுதல் இன்றியமையாதது என்னும் சட்டத்தை வற்புறுத்தல் தகாது. இத்தகைய சட்டமிருப்பதால், சைவர்களின் எண்ணிக்கை குறையுமே தவிர பயன் ஒன்றுமில்லை.

(8) புரோகிதர்களுக்கு மதிப்பு கொடுப்பதாலேயே சைவத்தின வலிமை குறைகின்றது. கோயில்களில், வடமொழி மந்திரங்களைக் கூறும் சுமார்த்தர்களைக்கொண்டு இறைவனை வழிபடுதலும், இல்லங்களில் நடைபெறும் எல்லாச் சடங்குகளையும் அத்தகைய புரோகிதர்களைக் கொண்டு நடத்துவதும், சைவக் கொள்கைகளுக்கு முற்றிலும் மாறுபட்டவை என்பதையும் சைவ மக்களை உணரும்படிச் செய்ய வேண்டும்.

சைவம் வளர இவைகள் இன்றியமையாதன என்று கருதுகின்றேன். சைவமக்கள் சைவம் பரவ ஆவன செய்வார்களாக!

## விசாகம் எப்பொழுது?

[திருவாடானை - முத்துசுவாமி குருக்கள்]

இவ்வருட விசாகோத்ஸவம் ஆரம்பிக்க இராமனாதபுரம் சமஸ்தான பஞ்சாங்க கணன ஜோஸிய ரவர்கள் வைகாசிமீ 23உ ஆரம்பதினமெனவும், ஜோஸ்யம் கொண்டய்யங்காரவர்கள் சித்திரைமீ 26உ ஆரம்பதினமெனவும், தம் தம் பஞ்சாங்கத்தில் பிரசுரித்துள்ளார்கள். நான் கவனித்ததில் பர்வாவோடு நக்ஷத்திரம் சேர்ந்து வருவதுதான் தீர்த்தத்துக்கு முக்கியமென்னும் ஆகம வாக்யங்களை அனுசரித்துக்கொண்டய்யங்காரவர்கள் பிரசுரித்திருக்கிறபடி ஆரம்பிக்கவேண்டியதெனக் கருதுகிறேன். நிபுணர்கள் ஆகமங்களைப் பார்த்துப் பலாபலத்தைக் கவனித்துத் தயவு செய்து ஆகம வாக்யப் பிரமாணங்களுடன் எதில் நடத்துவது உத்தமமென்பதைப் பத்திரிகை வாயிலாகவோ என் விலாசத்துக்கோ வெளிப்படுத்த வேணுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

# அப்பர் தேவாரம்

## சரித்திரமுறைப் பதிக அட்டவணை

[பத்திராசிரியர்]

[குறிப்பு:—இவ்வட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள பதிக எண்கள் நமது சமாஜ வெளியீடாகிய அப்பர் தேவார இரண்டாம் பதிப்பிலுள்ளவை. முதற் பதிப்பிலும் இவ்விரண்டாம் பதிப்பிலும் பதிக வரிசை ஒன்றாகவேயுள்ளது.]

| எண் | தலம் | திருமுறை | பதிகம் | பாட்டு முதற்குறிப்பு | புராணச் செய்யுள் |
|---|---|---|---|---|---|
| 1 | திருவதிகைவீரட்டானம் ... | 4 | 1 | கூற்றாயின | 70 |
| 2 | பொது - மறுமாற்றம் ... | 6 | 98 | நாமார்க்கும் | 93 |
| 3 | தனித்திருக்குறுந்தொகை ... | 5 | 90 | மாசில்வீணை | 98 |
| 4 | திருவதிகைவீரட்டானம் ... | 4 | 2 | சுண்ணவெண் | 115 |
| 5 | பொது -நமச்சிவாயத்திருப்பதிகம் ... | 4 | 11 | சொற்றுணை | 126 |
| 6 | திருப்பாதிரிப்புலியூர் ... | 4 | 94 | ஈன்றாளுமாய் | 134 |
| 7 | திருவதிகைவீரட்டானம் ... | 6 | 3 | வெறிவிரவு | 143 |
| 8 | ,, ... | 4 | 10 | முளைக்கதிரிள | 144 |
| 9 | ,, ... | 4 | 24 | இரும்புகொப் | ,, |
| 10 | ,, ... | 4 | 25 | வெண்ணிலா | ,, |
| 11 | ,, ... | 4 | 26 | நம்பனேஎங் | ,, |
| 12 | ,, ... | ,, | 27 | மடக்கினார் | ,, |
| 13 | ,, ... | ,, | 28 | முன்பெலா | ,, |
| 14 | ,, ... | ,, | 104 | மாசிலொள் | ,, |
| 15 | ,, ... | 5 | 53 | கோணன்மா | ,, |
| 16 | ,, ... | ,, | 54 | எட்டுநாண் | ,, |
| 17 | ,, ... | 6 | 4 | சந்திரனைமா | ,, |
| 18 | ,, ... | ,, | 5 | எல்லாஞ்சிவ | ,, |
| 19 | ,, ... | ,, | 6 | அரவணையான் | ,, |
| 20 | ,, ... | ,, | 7 | செல்வப்புனற் | ,, |

கரு

| எண் | தலம் | திருமுறை | பதிகம் | பாட்டு முதற்குறிப்பு | புராணச் செய்யுள் |
|---|---|---|---|---|---|
| 21 | திருமுண்டீச்சுரம் | 6 | 85 | ஆர்த்தான் | 148 |
| 22 | திருவாமாத்தூர் | 5 | 44 | மாமாத்தாகிய | ,, |
| 23 | ,, | 6 | 9 | வண்ணங்கள் | ,, |
| 24 | திருக்கோவலூர் | 4 | 69 | செத்தையேன் | ,, |
| 25 | திருத்தூங்கானைமாடம் | 4 | 109 | பொன்னார் | 151 |
| 26 | திருநெல்வாயில் அரத்துறை | 5 | 3 | கடவுளைக்கட | 154 |
| 27 | திருமுதுகுன்றம் | 6 | 68 | கருமணியை | ,, |
| 28 | கோயில் | 4 | 81 | கருநட்டகண் | 168 |
| 29 | ,, | 4 | 23 | பத்தனாய்ப் | 169 |
| 30 | ,, | 5 | 1 | அன்னம்பாலி | 171 |
| 31 | திருவேட்களம் | 5 | 42 | நன்றுநாடொ | 172 |
| 32 | திருக்கழிப்பாலை | 4 | 6 | வனபவளவாய் | 173 |
| 33 | ,, | 4 | 30 | நங்கையைப் | ,, |
| 34 | ,, | ,, | 106 | நெய்தற்குருகு | ,, |
| 35 | ,, | 5 | 40 | வண்ணமும் | ,, |
| 36 | ,, | 6 | 12 | ஊனுடுத்தி | ,, |
| 37 | கோயில் | 5 | 2 | பனைக்கைமும் | 174 |
| 38 | ,, | 6 | 1 | அரியானை | 175 |
| 39 | ,, | 4 | 42 | செஞ்சடைக் | 176 |
| 40 | ,, | ,, | 80 | பாளையுடைக் | ,, |
| 41 | ,, | 6 | 2 | மங்குல்மதி | ,, |
| 42 | திருநாரையூர் | 5 | 55 | வீறுதானுடை | 179 |
| 43 | ,, | 6 | 74 | சொல்லானை | ,, |
| 44 | ஸ்ரீகாழி | 4 | 82 | பார்கொண்டு | 187 |
| 45 | ,, | 4 | 83 | படையார்மழு | ,, |
| 46 | ,, | 5 | 45 | மாதியன்று | ,, |
| 47 | திருப்புன்கூரும் திருநீடூரும் | 6 | 11 | பிறவாதே | 189 |
| 48 | திருக்குறுக்கைவீரட்டம் | 4 | 49 | ஆதியிற்பிரம | ,, |
| 49 | ,, | ,, | 50 | நெடியமால் | ,, |
| 50 | திருநின்றியூர் | 5 | 23 | கொடுங்கண் | ,, |
| 51 | திருநனிபள்ளி | 4 | 70 | முற்றுணை | ,, |
| 52 | திருச்செம்பொன்பள்ளி | 4 | 29 | ஊனினுள் | 190 |
| 53 | ,, | 5 | 36 | கானறாத | ,, |
| 54 | திருமயிலாடுதுறை | 5 | 39 | கொள்ளுங் | ,, |



| எண் | தலம் | திருமுறை | பதிகம் | பாட்டு முதற்குறிப்பு | புராணச் செய்யுள் |
|---|---|---|---|---|---|
| 55 | திருத்துருத்தி | 4 | 42 | பொருத்திய | 190 |
| 56 | திருஅன்னியூர் | 5 | 8 | பாறலைத்த | ,, |
| 57 | திருஆப்பாடி | 4 | 48 | கடலகமேழி | ,, |
| 58 | திருஓமாம்புலியூர் | 6 | 88 | ஆராரும்மூவி | ,, |
| 59 | திருக்கஞ்சனூர் | 6 | 90 | மூவிலைநற் | ,, |
| 60 | திருக்கடம்பூர் | 5 | 19 | தளருங்கோள | ,, |
| 61 | ,, | 5 | 20 | ஒருவராயிரு | ,, |
| 62 | திருக்குரக்குக்கா | 5 | 75 | மரக்கொக்கா | ,, |
| 63 | திருக்கோழம்பம் | 5 | 64 | வேழமபத்தை | ,, |
| 64 | திருச்சாய்க்காடு | 4 | 65 | தோடுலாமலர் | ,, |
| 65 | ,, | 6 | 82 | வானத்திள | ,, |
| 66 | திருத்தென்குரங்காடுதுறை | 5 | 63 | இரங்காவன் | ,, |
| 67 | திருப்புள்ளிருக்குவேளூர் | 5 | 79 | வெள்ளெருக் | ,, |
| 68 | ,, | 6 | 54 | ஆண்டானை | ,, |
| 69 | திருமங்கலக்குடி | 5 | 73 | தங்கலப்பிய | ,, |
| 70 | திருமணஞ்சேரி | 5 | 87 | பட்டநெற்றி | ,, |
| 71 | திருவெண்காடு | ,, | 49 | பண்காட்டி | ,, |
| 72 | ,, | 6 | 35 | தூண்டுசுடர் | ,, |
| 73 | திருக்கோடிகா | 4 | 51 | நெற்றிமேற் | ,, |
| 74 | ,, | 5 | 78 | சங்குலாமுன் | ,, |
| 75 | ,, | 6 | 81 | கண்தலஞ்சேர் | ,, |
| 76 | திருவாவடுதுறை | ,, | 46 | நம்பனைநால் | 191 |
| 77 | ,, | 5 | 29 | நிறைக்கவாலி | ,, |
| 78 | ,, | 4 | 57 | மஞ்சனேமணி | ,, |
| 79 | ,, | 6 | 47 | திருவேயென் | ,, |
| 80 | திருவிடைமருதூர் | 4 | 35 | காடுடைச் | 192 |
| 81 | ,, | 5 | 14 | பாசமொன் | ,, |
| 82 | ,, | ,, | 15 | பறையினோ | ,, |
| 83 | ,, | 6 | 16 | சூலப்படை | ,, |
| 84 | ,, | ,, | 17 | ஆறுசடைக் | ,, |
| 85 | திருநாகேச்சரம் | 4 | 66 | கச்சைசேரரவ | ,, |
| 86 | ,, | 5 | 52 | நல்லர்நல்ல | ,, |
| 87 | ,, | 6 | 66 | தாயவனை | ,, |
| 88 | திருச்சத்திமுற்றம் | 4 | 96 | கோவாய்முடுகி | 194 |

| எண் | தலம் | திருமுறை | பதிகம் | பாட்டு முதற்குறிப்பு | புராணச் செய்யுள் |
|---|---|---|---|---|---|
| 89 | திருநல்லூர் | ... 6 | 14 | நினைந்துருகும் | 196 |
| 90 | ,, | ... 4 | 97 | அட்டுமினில் | 197 |
| 91 | திருக்கருகாவூர் | ... 6 | 15 | குருகாம்வயிர | 198 |
| 92 | திருப்பாலைத்துறை | ... 5 | 51 | நீலமாமணி | ,, |
| 93 | பொது - விடந்தீர்த்ததிருப் பதிகம் | ... 4 | 18 | ஒன்றுகொலா | 208 |
| 94 | திருப்பழனம் | ... 4 | 12 | சொன்மாலை | 211 |
| 95 | ,, | ... 4 | 36 | ஆடினுரொரு | ,, |
| 96 | ,, | ... ,, | 87 | மேவித்து | ,, |
| 97 | ,, | ... 5 | 35 | அருவனாய் | ,, |
| 98 | ,, | ... 6 | 36 | அலையார்கடல் | ,, |
| 99 | திருச்சோற்றுத்துறை | ... 4 | 41 | பொய்விரா | 212 |
| 100 | ,, | ... ,, | 85 | காலையெழுந்து | ,, |
| 101 | ,, | ... 5 | 33 | கொல்லையேற் | ,, |
| 102 | ,, | ... 6 | 44 | மூத்தவனாய் | ,, |
| 103 | திருக்கண்டியூர் | ... 4 | 93 | வானவர்தான | ,, |
| 104 | திருவேதிகுடி | ... ,, | 90 | கையதுகாலெ | ,, |
| 105 | திருவலஞ்சுழி | ... 5 | 66 | ஓதமார்கடலி | 215 |
| 106 | ,, | ... 6 | 72 | அலையார்புனற் | 215 |
| 107 | திருவலஞ்சுழியும் திருக் கொட்டையூரும் | ... ,, | 73 | கருமணிபோல் | ,, |
| 108 | திருக்குடமூக்கு | ... 5 | 22 | பூவணத்தவன் | ,, |
| 109 | திருச்சேறை | ... 4 | 73 | பெருந்திரு | 216 |
| 110 | ,, | ... 5 | 77 | பூரியாவரும் | ,, |
| 111 | திருவாஞ்சியம் | ... 5 | 67 | படையும் பூத | ,, |
| 112 | திருப்பெருவேளூர் | ... 4 | 60 | மறையணிநாவி | 217 |
| 113 | திருஆரூர் | ... 4 | 101 | குலம்பலம்பா | 220 |
| 114 | ,, | ... ,, | 20 | காண்டலேக | 223 |
| 115 | ,, | ... ,, | 5 | மெய்யெலாம் | 224 |
| 116 | ,, | ... ,, | 4 | பாடிளம்பூத | 226 |
| 117 | ,, | ... ,, | 19 | சூலப்படை | ,, |
| 118 | ,, | ... ,, | 52 | படுகுழிப்பவ்வ | ,, |
| 119 | ,, | ... ,, | 53 | குழல்வலங் | ,, |
| 120 | ,, | ... 5 | 6 | எப்போதும் | ,, |



| எண் | தலம் | திருமுறை | பதிகம் | பாட்டு முதற்குறிப்பு | புராணச் செய்யுள் |
|---|---|---|---|---|---|
| 121 | திருஆரூர் | ... 5 | 7 | கொக்கரைகு | 226 |
| 122 | ,, | ... 6 | 24 | கைம்மான | ,, |
| 123 | ,, | ... ,, | 25 | உயிராவண | ,, |
| 124 | ,, | ... ,, | 26 | பாதித்தன் | ,, |
| 125 | ,, | ... ,, | 28 | நீற்றினையும் | ,, |
| 126 | ,, | ... ,, | 29 | திருமணியை | ,, |
| 127 | ,, | ... ,, | 30 | எம்பந்த | ,, |
| 128 | ,, | ... ,, | 31 | இடர்கெடுமா | ,, |
| 129 | ,, | ... ,, | 32 | கற்றவர் | ,, |
| 130 | ,, | ... ,, | 34 | ஒருவனாய் | ,, |
| 131 | ,, | ... ,, | 102 | வேம்பினை | 227 |
| 132 | திருஆரூர் அரநெறி | ... 4 | 17 | எத்திசைபுகி | ,, |
| 133 | ,, | ... 6 | 33 | பொருங்கைம | ,, |
| 134 | திருவலிவலம் | ... ,, | 48 | நல்லான்காண் | 228 |
| 135 | திருக்கீழ்வேளூர் | ... ,, | 67 | ஆளானஅடிய | ,, |
| 136 | திருக்கன்றாப்பூர் | ... ,, | 61 | மாதினையோர் | ,, |
| 137 | திருப்பயற்றூர் | ... 4 | 32 | உரித்திட்டார் | 230 |
| 138 | திருப்பள்ளியின் முக்கூடல் | ... 6 | 69 | ஆராதஇன்ன | ,, |
| 139 | திருஆரூர் | ... 4 | 21 | முத்துவிதான | 235 |
| 140 | திருப்புகலூர் | ... 5 | 46 | துன்னக்கோவ | 239 |
| 141 | திருச்செங்காட்டங்குடி | ... 6 | 84 | பெருந்தகை | 240 |
| 142 | திருநள்ளாறு | ... 5 | 68 | உள்ளாறுத | ,, |
| 143 | ,, | ... 6 | 20 | ஆதிக்கண் | ,, |
| 144 | திருமருகல் | ... 5 | 88 | பெருகலாந் | ,, |
| 145 | திருக்கடவூர்வீரட்டம் | ... 4 | 31 | பொள்ளத்த | 247 |
| 146 | ,, | ... ,, | 107 | மருள்துயர் | ,, |
| 147 | ,, | ... 5 | 37 | மலைக்கொ | ,, |
| 148 | திருக்கடவூர்மயானம் | ... 5 | 38 | குழைகொள் | 248 |
| 149 | திருஆக்கூர் | ... 6 | 21 | முடித்தாமரை | 249 |
| 150 | திருமீயச்சூரிளங்கோயில் | ... 5 | 11 | தோற்றுங் | ,, |
| 151 | திருவலம்புரம் | ... 4 | 55 | தெண்டிரை | ,, |
| 152 | ,, | ... 6 | 58 | மண்ணளந்த | ,, |
| 153 | திருவீழிமிழலை | ... ,, | 50 | போரானைஈரு | 253 |
| 154 | ,, | ... 4 | 64 | பூதத்தின் | 262 |

| எண் | தலம் | திருமுறை | பதிகம் | பாட்டு முதற்குறிப்பு | புராணச் செய்யுள் |
|---|---|---|---|---|---|
| 155 | திருவீழிமிழலை | ... 4 | 95 | வான்சொட் | 262 |
| 156 | ,, | ... 5 | 12 | கரைந்துகை | ,, |
| 157 | ,, | ... ,, | 13 | என்பொனே | ,, |
| 158 | ,, | ... 6 | 51 | கயிலாயமலை | ,, |
| 159 | ,, | ... ,, | 52 | கண்ணவன் | ,, |
| 160 | ,, | ... ,, | 53 | மானேறுகர | ,, |
| 161 | திருக்கொண்டீச்சரம் | ... 4 | 67 | வரைகிலேன் | 263 |
| 162 | ,, | ... 5 | 70 | கண்டபேச்சி | ,, |
| 163 | திருக்கோளிலி | ... ,, | 56 | மைக்கொள் | ,, |
| 164 | ,, | ... ,, | 57 | முன்னமே | ,, |
| 165 | திருத்தலையாலங்காடு | ... 6 | 79 | தொண்டர்க்கு | ,, |
| 166 | திருப்பேரெயில் | ... 5 | 16 | மறையும்ஓதி | ,, |
| 167 | திருமறைக்காடு | ... ,, | 10 | பண்ணினேர் | 268 |
| 168 | ,, | ... 4 | 33 | இந்திரனோடு | 270 |
| 169 | ,, | ... ,, | 34 | தேரையும் | ,, |
| 170 | ,, | ... 5 | 9 | ஓதமால்கடல் | ,, |
| 171 | ,, | ... 6 | 23 | தூண்டுசுட | ,, |
| 172 | திருவாய்மூர் | ... 5 | 50 | எங்கேயென் | 277 |
| 173 | ,, | ... 6 | 77 | பாடஅடியார் | 281 |
| 174 | திருநாகைக்காரோணம் | ... 4 | 71 | மனைவிதாய் | 291 |
| 175 | ,, | ... ,, | 103 | வடிவுடைமா | ,, |
| 176 | ,, | ... 5 | 83 | பாணத்தால் | ,, |
| 177 | ,, | ... 6 | 22 | பாரார்பரவும் | ,, |
| 178 | திருவாவடுதுறை | ... 4 | 56 | மாயிருஞால | 293 |
| 179 | திருப்பழையாறைவடதளி | ... 5 | 58 | தலையெலாம் | 300 |
| 180 | திருஅரிசிற்கரைப்புத்தூர் | ... ,, | 61 | மூத்தாரும் | 301 |
| 181 | திருஅவளிவணல்லூர் | ... 4 | 59 | தோற்றினான் | ,, |
| 182 | திருஅன்பிலாலந்துறை | ... 5 | 80 | வானஞ்சேர் | ,, |
| 183 | திருஆலம்பொழில் | ... 6 | 86 | கருவாகி | ,, |
| 184 | திருஇன்னம்பர் | ... 4 | 72 | விண்ணவர் | ,, |
| 185 | ,, | ... ,, | 100 | மன்னுமலை | ,, |
| 186 | ,, | ... 5 | 21 | என்னிலாரும் | ,, |
| 187 | ,, | ... 6 | 89 | அல்லிமலர் | ,, |
| 188 | திருக்கடம்பந்துறை | ... 5 | 18 | முற்றிலாமுலை | ,, |



| எண் | தலம் | திருமுறை | பதிகம் | பாட்டு முதற்குறிப்பு | புராணச் செய்யுள் |
|---|---|---|---|---|---|
| 189 | திருக்கடுவாய்கரைப்புத்தூர் | ... 5 | 62 | ஒருத்தனை | 301 |
| 190 | திருக்கருவிலிக் கொட்டிட்டை | ,, | 69 | மட்டிட்டகுழ | ,, |
| 191 | திருக்காட்டுப்பள்ளி (மேலை)... | ,, | 84 | மாட்டுப்பள்ளி | ,, |
| 192 | திருக்கானூர் | ... ,, | 76 | திருவின்நாத | ,, |
| 193 | திருக்குடந்தைக்கீழ்க்கோட்டம் | 6 | 75 | சொன்மலிந்த | ,, |
| 194 | திருச்சிவபுரம் | ... ,, | 87 | வானவன் | ,, |
| 195 | திருநல்லம் | ... 5 | 43 | கொல்லத்தான் | ,, |
| 196 | திருநீலக்குடி | ... ,, | 72 | வைத்தமாடும் | ,, |
| 197 | திருப்பந்தணைநல்லூர் | ... 6 | 10 | நோதங்க | ,, |
| 198 | திருப்பாண்டிக்கொடுமுடி | ... 5 | 81 | சிட்டனை | ,, |
| 199 | திருப்புறம்பயம் | ... 6 | 13 | கொடிமாட | ,, |
| 200 | திருப்பூவனூர் | ... 5 | 65 | பூவனூர் | ,, |
| 201 | திருவன்னியூர் | ... ,, | 26 | காடுகொண்ட | ,, |
| 202 | திருவாட்போக்கி | ... ,, | 86 | காலபாச | ,, |
| 203 | திருவிசயமங்கை | ... ,, | 71 | குசையும் | ,, |
| 204 | திருவெண்ணியூர் | ... ,, | 17 | முத்தினை | ,, |
| 205 | ,, | ... 6 | 59 | தொண்டிலங் | ,, |
| 206 | திருஆனைக்கா | ... 5 | 31 | கோனைக்கா | 302 |
| 207 | ,, | ... 6 | 62 | எத்தாயர் | ,, |
| 208 | ,, | ... ,, | 63 | முன்னானை | ,, |
| 209 | திருஎறும்பியூர் | ... 5 | 74 | விரும்பியூறு | ,, |
| 210 | ,, | ... 6 | 91 | பன்னியசெந் | ,, |
| 211 | திரிச்சிராப்பள்ளி | ... 5 | 85 | மட்டுவார்குழ | 302 |
| 212 | திருக்கற்குடி | ... 6 | 60 | மூத்தவனை | ,, |
| 213 | திருப்பராய்த்துறை | ... 5 | 30 | கரப்பர்கால | ,, |
| 214 | திருப்பைஞ்ஞீலி | ... 5 | 41 | உடையார் | 310 |
| 215 | திருஅண்ணமலை | ... 4 | 63 | ஓதிமாமலர்கள் | 313 |
| 216 | ,, | ... 5 | 4 | வட்டனைம் | ,, |
| 217 | ,, | ... ,, | 5 | பட்டிஏறுகந் | ,, |
| 218 | திருக்கச்சியேகம்பம் | ... 4 | 7 | கரவாடும்வன் | 324 |
| 219 | ,, | ... ,, | 44 | நம்பனைநகர | 325 |
| 220 | ,, | ... ,, | 99 | ஓதுவித்தாய் | ,, |
| 221 | ,, | ... 5 | 47 | பண்டுசெய்த | ,, |
| 222 | ,, | ... ,, | 48 | பூமேலானும் | ,, |

| எண் | தலம் | திருமுறை | பதிகம் | பாட்டு முதற்குறிப்பு | புராணச் செய்யுள் |
|---|---|---|---|---|---|
| 223 | திருக்கச்சிமேற்றளி | 4 | 43 | மறையதுபாடி | 326 |
| 224 | திருமாற்பேறு | 4 | 108 | மாணிக்குயிர் | 327 |
| 225 | ,, | 5 | 59 | பொருமால் | ,, |
| 226 | ,, | ,, | 60 | ஏதுமொன் | ,, |
| 227 | ,, | 6 | 80 | பாரானைப்பா | ,, |
| 228 | திருக்கச்சியேகம்பம் | ,, | 64 | கூற்றுவன் | 328 |
| 229 | ,, | ,, | 65 | உரித்தவன் | ,, |
| 230 | திருக்கழுக்குன்றம் | ,, | 92 | மூவிலைவேல் | 330 |
| 231 | திருவான்மியூர் | 5 | 82 | விண்டமாமலர் | 331 |
| 232 | திருவொற்றியூர் | 6 | 45 | வண்டோங்கு | 336 |
| 233 | ,, | 4 | 86 | செற்றுக்களிற் | ,, |
| 234 | ,, | 5 | 24 | ஒற்றியூரு | ,, |
| 235 | ,, | 4 | 45 | வெள்ளத்தை | ,, |
| 236 | ,, | ,, | 46 | ஓம்பினேன் | ,, |
| 237 | திருப்பாசூர் | 5 | 25 | முந்திமூவெயி | 340 |
| 238 | ,, | 6 | 83 | விண்ணாகிநில | ,, |
| 239 | திருஆலங்காடு | ,, | 78 | ஒன்றாஉல | 342 |
| 240 | ,, | 4 | 68 | வெள்ளநீர் | ,, |
| 241 | திருக்காளத்தி | 6 | 8 | விற்றாணைன் | 345 |
| 242 | திருப்பருப்பதம் | 4 | 58 | கன்றினார்புர | 349 |
| 243 | திருக்கோகரணம் | 6 | 49 | சந்திரனுந் | 350 |
| 244 | திருக்கயிலாயம் | ,, | 55 | வேற்றாகிவிண் | 370 |
| 245 | ,, | 4 | 47 | கனகமாவயிர | ,, |
| 246 | ,, | 6 | 56 | பொறையுடை | ,, |
| 247 | ,, | ,, | 57 | பாட்டான | ,, |
| 248 | திருஐயாறு | ,, | 37 | ஆரார்திரிபுரங் | 381 |
| 249 | ,, | 4 | 3 | மாதர்பிறைக் | 384 |
| 250 | ,, | 6 | 38 | ஓசையொலி | 385 |
| 251 | ,, | 5 | 27 | சிந்தைவாய்த | ,, |
| 252 | ,, | ,, | 28 | சிந்தைவண்ண | ,, |
| 253 | ,, | 4 | 38 | கங்கையைச்ச | ,, |
| 254 | ,, | ,, | 39 | குண்டனாய்ச்ச | ,, |
| 255 | ,, | ,, | 40 | தானலாதுலக | ,, |
| 256 | ,, | ,, | 91 | குறுவித்தவா | ,, |



| எண் | தலம் | திருமுறை | பதிகம் | பாட்டு முதற்குறிப்பு | புராணச் செய்யுள் |
|---|---|---|---|---|---|
| 257 | திருஐயாறு | 4 | 92 | சிந்திப்பரிய | 385 |
| 258 | ,, | ,, | 98 | அந்திவட்ட | ,, |
| 259 | ,, | ,, | 13 | விடகிலேன் | ,, |
| 260 | திருநெய்த்தானம் | 4 | 37 | காலனைவீழ | 386 |
| 261 | ,, | ,, | 89 | பாரிடஞ்சாடி | ,, |
| 262 | ,, | 5 | 34 | கொல்லியான் | ,, |
| 263 | ,, | 6 | 41 | வகையெலா | ,, |
| 264 | ,, | ,, | 42 | மெய்த்தான | ,, |
| 265 | திருமழபாடி | ,, | 39 | நீறேறுதிருமே | ,, |
| 266 | ,, | ,, | 40 | அலையடுத்த | ,, |
| 267 | திருப்பூந்துருத்தி | ,, | 43 | நில்லாதநீர்ச | 388 |
| 268 | ,, | 5 | 32 | கொடிகொள் | ,, |
| 269 | ,, | 4 | 88 | மாலினைமாலு | 389 |
| 270 | பலவகைத் திருத்தாண்டகம் | 6 | 93 | நேர்ந்தொரு | 390 |
| 271 | தனித்திருத்தாண்டகம் | ,, | 96 | ஆமயந் | ,, |
| 272 | அடைவு திருத்தாண்டகம் | ,, | 71 | பொருப்பள்ளி | ,, |
| 273 | திருஅங்கமாலை | 4 | 9 | தலையேநீவண | ,, |
| 274 | தனித்திருக்குறுந்தொகை | 5 | 89 | ஒன்றுவெண் | ,, |
| 275 | ,, | ,, | 91 | ஏயிலானை | ,, |
| 276 | காலபாசத் திருக்குறுந்தொகை | ,, | 92 | கண்டுகொள்ள | ,, |
| 277 | மறக்கிற்பனே ,, | ,, | 93 | காசனைக்கன | ,, |
| 278 | தொழற்பாலதே ,, | ,, | 94 | அண்டத்தா | ,, |
| 279 | இலிங்கபுராணம் ,, | ,, | 95 | புக்கணைந்து | ,, |
| 280 | மனத்தொகை ,, | ,, | 96 | பொன்னுள்ள | ,, |
| 281 | சித்தத்தொகை ,, | 5 | 97 | சிந்திப்பார் | ,, |
| 282 | உள்ளத் ,, | ,, | 98 | நீறலைத்த | ,, |
| 283 | பாவநாசத் ,, | ,, | 99 | பாவமும்பழி | ,, |
| 284 | ஆதிபுராணத் ,, | ,, | 100 | வேதநாயகன் | ,, |
| 285 | திருப்புத்தூர் | 6 | 76 | புரிந்தமரர் | 402 |
| 286 | திருஆலவாய் | ,, | 19 | முளைத்தானை | 404 |
| 287 | ,, | 4 | 62 | வேதியாவேத | 406 |
| 288 | திருப்பூவணம் | 6 | 18 | வடிவேறுதிரி | 407 |
| 289 | திருஇராமேச்சரம் | 4 | 61 | பாசமுங்கழிக்க | 409 |
| 290 | திருப்புகலூர் | ,, | 16 | செய்யர்வெண் | 413 |

| எண் | தலம் | திருமுறை | பதிகம் | பாட்டு முதற்குறிப்பு | புராணச் செய்யுள் |
|---|---|---|---|---|---|
| 291 | திருப்புகலூர் | ... 4 | 54 | பகைத்திட்டா | 413 |
| 292 | நின்றதிருத்தாண்டகம் | ... 6 | 94 | இருநிலனாய் | 414 |
| 293 | தனித் ,, | ... ,, | 95 | அப்பன்நீ | ,, |
| 294 | க்ஷேத்திரக்கோவை | ... ,, | 70 | தில்லைச்சிற்றம் | ,, |
| 295 | குறைந்த திருநேரிசை | ... 4 | 78 | வென்றிலேன் | ,, |
| 296 | ,, | ... ,, | 79 | தம்மானம் | ,, |
| 297 | தனித்திருநேரிசை | ... ,, | 75 | தொண்டனே | ,, |
| 298 | ,, | ... ,, | 76 | மருளவா | ,, |
| 299 | ,, | ... ,, | 77 | கடும்பகல் | ,, |
| 300 | ஆருயிர்த் திருவிருத்தம் | ... ,, | 84 | எட்டாந்திசை | 415 |
| 301 | தசபுராணம் | ... ,, | 14 | பருவரையொ | ,, |
| 302 | பாவநாசத் திருப்பதிகம் | ... ,, | 15 | பற்றற்றார்சேர் | ,, |
| 303 | பொது - சிவனெனுமோசை | ... ,, | 8 | சிவனெனும் | ,, |
| 304 | நினைந்த திருநேரிசை | ... ,, | 74 | முத்தினை | ,, |
| 305 | வினாவிடைத் திருத்தாண்டகம் | 6 | 97 | அண்டங்கடந் | ,, |
| 306 | திருஆரூர் | ... ,, | 27 | பொய்ம்மாய | 423 |
| 307 | திருப்புகலூர் | ... 4 | 105 | தன்னைச்சா | 426 |
| 308 | பசுபதித்திருவிருத்தம் | ... ,, | 110 | சாம்பலைப்பூசி | ,, |
| 309 | சரக்கறை ,, | ... ,, | 111 | விடையும் | ,, |
| 310 | தனி ,, | ... ,, | 112 | வெள்ளி | ,, |
| 311 | ,, ,, | ... ,, | 113 | பவளத்தடவ | ,, |
| 312 | திருப்புகலூர் | ... 6 | 99 | எண்ணுகேன் | 427 |

## குறிப்புகள்

### அட்டவணை விளக்கம்

சேக்கிழார் சுவாமிகள் பெரிய புராணத்துள் திருநாவுக்கரசு சுவாமிகள் புராணத்தில் கூறும் சரித்திர முறையைத் தழுவி இவ்வட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளது. ஆதாரச் செய்யுள் எண்கள் ௸ புராணத்திலுள்ளவை. சேக்கிழாரால் தெளிவாகக் குறிக்கப்படும் பதிகங்கள் ஏறக்குறைய நூற்றைம்பது இருக்கும். ஏனைய பதிகங்கள் தலக்குறிப்பின் துணைகொண்டும் வேறு வழியிலும் இவ்



வட்டவணையில் கூடியவரையில் பொருத்தமான இடம் பெற்றுள்ளன. இவ்வட்டவணையில் சில பதிகங்களை வேறு வேறிடங்களில் வைக்கவும் கூடும். வேறு போதிய ஆதாரமில்லாத இடங்களில் பண்முறையே சரித்திர முறையாகவும் கொள்ளப்பட்டுள்ளது. உதாரணமாகத் திருவதிகைவீரட்டானம் என்ற தலக்குறிப்போடு (இவ்வட்டவணையில் 1, 4, 7—20 எண்கள் உள்ள) 16 பதிகங்கள் உள்ளன. இவற்றுள் சேக்கிழார் 70, 115, 143-ம் செய்யுட்களில் 1, 4, 7 ஆகிய மூன்று பதிகங்கள் பாடப்பட்ட சந்தர்ப்பத்தைக் குறித்துவிட்டு, ஏனைய பதின்மூன்று பதிகங்களைத் தமது 144-வது செய்யுளில் “செந்தமிழ்ப் பாட்டுப் பலபாடி” என்று கூறுகிறார். இவற்றுள் இன்ன வரிசையென்பது குறிக்கப்படாமையால், அப்பதிகங்கள் இயல்பாக அமைந்துள்ள திருமுறைப்பண் வரிசையே இவ்வட்டவணையில் கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறே மற்ற இடங்கட்கும் கொள்க. பல தலங்கள் சென்று, பாமாலைகள் சாத்திப் பிறகு அப்பர் சுவாமிகள் இன்ன தலத்தை யடைந்தார் என்று சில இடங்களில் சேக்கிழார் கூறுகிறார். அம்மாதிரி யிடங்களில் அவர் சென்ற வழியில் அருகிருக்கும் **தலங்கள் அகரவரிசையிலும்**, ஒவ்வொரு தலத்தின் **பாடல்கள் பண் வரிசையிலும்** இவ்வட்டவணையில் இடம் பெற்றுள்ளன. இனிச் சிற்சில பதிகங்களைப்பற்றிய விசேடக் குறிப்புக்களைக் கீழே காண்க.

3. இப்பதிகத்தின் பொருளைச் சேக்கிழார் கூறுகிறாரே தவிர இப்பதிகத்தை இந்த சந்தர்ப்பத்தில் அப்பர் சுவாமிகள் பாடினார் என்று கூறவில்லை. 4. இப்பதிகம் பாடலிபுத்திரத்தில் பாடப்பெற்றதாயினும் திருவதிகைவீரட்டானம் என்ற தலக்குறிப்பைப் பெற்றிருக்கிறது. இஃதேபோல் வேறு சில பதிகங்கட்கும் தலக்குறிப்பு ஒன்றும் பாடிய இடம் ஒன்றுமாக உள்ளன. 8—20. பண்வரிசை. திருவதிகைக்கு மீண்டும் சுவாமிகள் திரும்பிவந்ததாகப் பெரிய புராணம் கூறாததால், சுவாமிகள் தலயாத்திரைக்குப் புறப்படுமுன் திருவதிகைப் பதிகங்களெல்லாம் இடம் பெற்றுள்ளன. 21. முண்டீச்சரம் திருவெண்ணெய் நல்லூருக்கருகிலுள்ளபடியாலும், பல பதிகளில் வணங்கி வளத்தமிழ்பாடித் தூங்கானைமாடஞ் சென்றார் என்று புராணத்தில் கூறப்பட்டுள்ளபடியாலும், மற்றொரு முறை இவ்வழியில் சுவாமிகள் வந்ததாகப் பெரியபுராணம் தெளிவாகக் கூறாமை

யாலும் இத்தலப் பதிகம் இங்கு இடம் பெற்றது. இவ்வாறே வேறு பல தலங்கட்கும் கொள்க. 32—36. இவற்றுள் 32 மட்டும் கூறப்பட்டு ஏனைய "வண்தமிழ் பாடி" எனப் பொதுவாகக் கூறப்படுதலால் அவை பண் வரிசையில் தரப்பட்டுள்ளன. 40, 41. இவ்விரண்டைத் தவிர ஏனைய கோயில் பதிகங்கள் ஆறும் குறிக்கப்பட்டுள்ளனவாகையால் இவை இறுதியில் பண் வரிசையில் அமர்த்தப்பட்டன. 56—72. இத்தலங்கள் அகர வரிசையிலும், பதிகங்கள் பண் வரிசையிலும் தரப்பட்டுள்ளன. 103, 104. 'தானங்கள் பல பாடி' என்ற பெரியபுராண ஆதாரங் கொண்டு இவை இங்கேயுள்ளன. ஐயாறு, பூந்துருத்தி, நெய்த்தானம் ஆகிய மூன்றும் பின்னர் பெயரோடு குறிக்கப்படுதலால் இங்கு அவை சேர்க்கப்படவில்லை. 117—130. பண் வரிசை. 137, 138. 'பதி பிறவும் பணிந்து' என்ற குறிப்பை ஆதாரமாக உடையன. 139. தலக் குறிப்பு ஆரூர், பாடிய இடம் புகலூர். 140. இது இங்குள்ளதன் காரணத்தை 307-ன் குறிப்பிற் காண்க. 150, 151. 'பதி பலவும் வணங்கி' என்ற ஆதாரமுடையன. 154—160. பண் வரிசை. 161—166. "வாழ்பதிகள்... இறைஞ்சி இசை வண்தமிழ்கள் புனைந்து" என்ற ஆதாரமுடையன. 168—171. பண் வரிசை. 180—205. தலங்கள் அகர வரிசை, பதிகங்கள் பண் வரிசை. "பொன்னியினில் இரண்டு கரையும்...... இறைஞ்சித் தமிழ் மாலைகளும்" என்ற ஆதரவுடையன. இவற்றுள் சிலவற்றை 214-க்கும் 215-க்கும் இடையில் வைக்கவும் கூடும். இஃதேபோல் மேற்கண்ட வேறு சிலவற்றையும் முறை மாற்றி வைக்கவும் கூடும். 243. பெரியபுராணம் இதைக் குறித்திலதேனும் "கன்னடம் எய்தினர்" என்பதாலும் இத்தலம் வடகன்னட ஜில்லாவிலுள்ள படியாலும் இங்கே இடம்பெற்றது. 245—247. பண் வரிசை. 250—258. தாண்டகம், குறுந்தொகை, நேரிசை, விருத்தம் என்று பெரியபுராணச் செய்யுள் கூறும் ஒவ்வொன்றிலும் பண் வரிசை. 271. பாவுந் தனித்தாண்டகம் இதுவென்று ஊகிக்கப்படுகின்றது. 274—284. பண் வரிசை. 290, 291. கீழே 307-ன் குறிப்பைப் பார்க்க. 293. இது நீடுதனித்தாண்டகம் என்று ஊகிக்கப்படுகிறது. 304, 305. 'பிறவும' என்பதே ஆதாரம். 307. புகலூர்ப் பதிகங்கள் ஐந்துள் இதுவும் 312-ம் போக ஏனைய மூன்றுள் 290, 291



மாலைகளாகையால் அவை ஆங்கும் எஞ்சிய குறுந்தொகைமட்டும் 140-ஆவதாகவும் வைக்கப்பட்டன.

## அப்பர் தேவாரமுள்ள தலங்களுள் பெயரிட்டுச் சேக்கிழாரால் குறிக்கப்படாதவை

அரிசிற்கரைப்புத்தூர், அவளிவணல்லூர், அன்பிலாலந்துறை, அன்னியூர், ஆப்பாடி, ஆலம்பொழில், இன்னம்பர், ஓமாம்புலியூர், கஞ்சனூர், கடம்பந்துறை, கடம்பூர், கடுவாய்க்கரைப்புத்தூர், கண்டியூர், கருவிலிக்கொட்டிட்டை, காட்டுப்பள்ளி (மேலை), கானூர், குடந்தைக் கீழ்க்கோட்டம், குரக்குக்கா, குரங்காடுதுறை (தென்), கொண்டீச்சரம், கோழம்பம். கோளிலி, சாய்க்காடு, சிவபுரம், தலையாலங்காடு, நல்லம், நீலக்குடி, பந்தணைநல்லூர், பயற்றூர், பள்ளியின்முக்கூடல், பாண்டிக்கொடுமுடி, புள்ளிருக்குவேளூர், புறம்பயம், பூவனூர், பேரெயில், மங்கலக்குடி, மணஞ்சேரி, மீயச்சூரிளங்கோயில், முண்டீச்சரம், வலம்புரம், வன்னியூர், வாட்போக்கி, விசயமங்கை, வெண்காடு, வெண்ணியூர், வேதிகுடி (ஆக 46.)

## சேக்கிழாரால் குறிக்கப்பட்டு இப்போது அப்பர் தேவாரமில்லாத தலங்கள்

அம்பர், ஆவூர், எதிர்கொள்பாடி, ஒத்தூர், கருப்பறியலூர், காரிக்கரை, கானப்பேர், குடவாயில், கோலக்கா, சாத்தமங்கை (அயவந்தி), தினைநகர், நறையூர்பாலூர், நாலூர், நெல்வேலி, மயிலாப்பூர், மாணிகுழி, வாரணாசி, விளமர், வெண்ணெய்நல்லூர், வேள்விக்குடி (ஆக 20.)

---

**அப்பர் தேவாரம் - இரண்டாம் பதிப்பு**

சமாஜ வெளியீடு - தனிப்பிரதி விலை ரூபா ஒன்று

பதினொரு பிரதிகள் விலை ரூபா பத்து

**தபால் கூலி வேறு**

# சைவமும் தமிழிலக்கியமும்

[வை. சுந்தரேச வாண்டையார், ஆசிரியர், திருவையாறு]

சைவமும் தமிழிலக்கியமும் என்ற சொற்றொடர்,
சைவம் எங்ஙனம் தமிழிலக்கியங்களில் வலியுறுத்தப்படு
கின்றதென்று பொருள்படும்.

ஒரு நாட்டினரின் பழக்க வழக்கங்களையும் அவர்கள்
உள்ளத்துக் கிடந்த சிறந்த கொள்கைகளையும் தெள்ளிதிற்
புலப்படுத்த வல்லன அவர்கள் தாய்மொழியானியன்ற
சிறந்த இலக்கியங்களேயாம். கால நிலைக்கு ஏற்ப, மக்களின்
நோக்கங்களும் பழக்க வழக்கங்களும் மாறுபடுவது இயல்பே.
அத்தகைய மாறுபாடுகளைப் பிற்காலத்தார் உள்ளபடி
உணர்ந்துகொள்வதற்கு உதவியா யிருப்பதும் சிறந்த இலக்
கியங்களே.

ஒரு காலத்திலிருந்த மக்களின் உள்ளம் எதன் மாட்டு
ஆர்வங் கொண்டிருந்தது என்பதை அக்காலத்திலிருந்த நல்
லிசைப் புலவர்கள் இயற்றிய நூல்களாலேயே உணரலாம்
என்பது இலக்கிய வரலாறு உணர்ந்தவர்களுக்குத் தெள்ளி
திற் றெரியக் கூடியதாம்.

ஒவ்வொரு காலத்தெழுந்த நூல்களுள் பெரும்பாலும்
ஒரே வகையான உட்கிடை யமைந்திருக்கின்றது. நம் செந்
தமிழ் நாட்டில் கடைச் சங்க காலத்தினும் அதற்கு முற்
பட்ட காலத்தினும் இயன்ற சிறந்த இலக்கியங்களின் உட்
கிடை பெரும்பாலும் அகப்பொருட்டிறமும் புறப்பொருட்
டிறமுமேயாம். புறப்பொருட் சுவையினும் அகப்பொருட்
சுவையே மக்களது உள்ளத்தைக் கவர்ந்தது என்பதற்குச்
சங்கத் தொகை நூல்களில் அகப்பொருள் இலக்கியங்கள்
மிக்கிருப்பதாலேயே நன்கு உணரலாகும்.



'நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூ
றொத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல்
கற்றறிந்தோ ரேத்துங் கலியே அகம்புறமென்
றித்திறத்த எட்டுத் தொகை'

என்று எண்ணப்பட்ட பழைய தொகை நூல்கள் எட்டில்
புறம் பதிற்றுப்பத்து ஒழிந்த ஏனைய நூல்கள் இவ்வகத்தி
னைப் பற்றி அமைந்தனவேயாம். கடைச் சங்க நாளில் ஒரு
காலத்தே பொருளிலக்கண மறிந்த புலவர் கிடையாமற் பாண்
டியன் புடைபடக் கவன்றபோது "என்னை? எழுத்துஞ்
சொல்லும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்
டன்றே? பொருளதிகாரம் பெறேமே எனின், இவை
பெற்றும் பெற்றிலேம்" என அவ்வரசன் கூறினனென்றும்
அக்காலத்தே இறையனாரே முன்னின்று அவன் கவற்சி நீங்க
அகப்பொருள் இலக்கணம் ஒன்றை அருளிச்செய்ய, அதற்
குப் புலவரைக் கொண்டு அவன் பொருள் கண்டனனென்
றும் கேட்கப்படும் செய்தி அக்காலத்து அகப்பொருளாராய்ச்
சியில் மக்களுக்கிருந்த ஊக்க மிகுதியைப் புலப்படுத்தும்.

இவ்வகப் பொருள் வந்த வரலாறுபற்றி உரைப்பது
தவறும் என்று கூறுவாருமுளர். ஆத்தன் வாக்கியம் ஆக
மப் பிரமாணம் என்பர்; அது கொண்டு ஈண்டு யாம் கூறியது
தவறெனின், பல பெரியார் கூறுவது அனைத்தும் தவறும்.
ஒருவர் ஆகமப் பிரமாணத்தை உடம்படாவிடில் அவர் எதை
யும் உடம்பட முடியாது.

கடைச் சங்கத்து இறுதியிலிருந்த தெய்வப் புலமைத்
திருவள்ளுவனார் காலமுதல் அவர் இயற்றிய திருக்குறளைப்
பின் பற்றி அறம் பொருள் இன்பங்களை ஒருங்கே யமைத்து
(அறத்துப் பாலையும் பொருட் பாலையும் பெருக்கி) நூலியற்று
வதே புலவர்கள் இயல்பா யிருந்திருக்கலாம். இதனைப் பதி

னென் கீழ்க்கணக்கு நூல்களிற் பெரும்பான்மை யானவை யத்தகையனவாய் இருப்பதே வலியுறுத்தும்.

சங்க காலத்து இறுதி தொடங்கி நாயன்மார்கள் ஆழ்வார்கள் காலம்வரை, தமிழ் நாட்டில் பௌத்த சமண சமயக் கொள்கைகள் பரவி மக்கள் உள்ளம் அவற்றிடை ஊறிக்கிடந்தமையால் அச்சமயங்களின் கொள்கைகளை உட்கிடையாகக் கொண்ட இலக்கியங்கள் பல தோன்றலாயின.

அதன்பின்னர் முறையே சைவ வைணவ சமயச் சார்பான தேவாரம் திவ்யப்பிரபந்தம் முதலிய புகழ்ப்பாக்களும் தலபுராணங்களும் பிறவும் ஒன்றன்பின் ஒன்றாய்த் தோன்றின.

இங்ஙனம் காலந்தோறும் மக்கள் கருத்தும் அதற்கேற்பத் தமிழ் இலக்கியங்களின் உட்கிடையும் மாறுதலடையினும் சில சிறந்த கொள்கைகளும் வழக்கங்களும் மாறுதலடையாமல் தொன்றுதொட்டு இன்று வரை நிலவுகின்றன. சைவ சமயக் கொள்கையும் சிவவழிபாடும் அத்தகையனவே.

ஆதியிற் றமிழ்நூல் அகத்தியற்கு மாதொரு பாகர் உணர்த்தினரென்றும், பின்னர் குன்றமெறிந்த குமரவேள்பால் அக்குறுமுனிவர் தமிழ் உணர்ந்தார் என்றும், மேற்கூறிய திரிபுர மெரித்த விரிசடைக்கடவுளும், குன்றமெறிந்த குமரவேளும் தலைச் சங்கத்திருந்து, தமிழாராய்ந்தன ரென்றும் வரலாறுகள் கேட்கப்படுவதிலிருந்தே, தமிழுக்கும், தமிழ்த் தெய்வமாகிய சிவத்துக்கும், சிவனருள் சமயமாகிய சைவத்துக்கும், உள்ள தொடர்பு காலவரம்புக்குட் படாததெனல் தெரியவருகிறது.

(தொடரும்)



தானென வேறு காணப்படுமாறின்றி அவனோ டொற்றுமைப்பட்டு அவ்விறைபணியின் வழுவாது நிற்பின், மலமாயையென்னும் இரண்டனோடு வலிய கன்ம மலமும் இல்லையா யொழியும்.

அவனே தானேயென்னும் ஏகாரமிரண்டனுள் முன்னையது பிரிநிலைக்கண்ணும் பின்னையது தேற்றத்தின்கண்ணும் வந்தன. நெறி உவமவுருபு. மலமாயையொடு கூடிய வினையென்றாராகலின் இன்றேயென்றார். உவமைக்கோதியது பொருளினும், பொருளுக்கோதியது உவமையினுஞ் சென்றியைந்தன. ஈண்டொற்றுமைப்படுதலாவது, குடமுடைந்தவழிக் குடாகாயமும் ஆகாயமும்போல ஒருபொருளா யொற்றுமைப்படுதலோ, அன்றிக் குற்றியை மகனென்பதுபோலத் திரிவுகாட்சியா னொற்றுமைப்படுதலோ, அன்றி மண்ணே குடமென்பதுபோல ஒன்றுதிரிந்தொன்றா யொற்றுமைப்படுதலோ, அன்றி வெள்ளையுந் தாமரையும்போலக் குணகுணித்தன்மையா னொற்றுமைப்படுதலோ, அன்றித் தீயுமிரும்பும்போல ஒன்றினொன்று விரவுதலா னொற்றுமைப்படுதலோ, அன்றிப் பாலுநீரும்போலப் பிரிக்கப்படாத சையோகத்தா னொற்றுமைப்படுதலோ, அன்றிக் கருடனு மாந்திரிகனும்போலப் பாவனைமாத்திரையா னொற்றுமைப்படுதலோ, அன்றிக் காய்ந்தவிரும்பினீர்போல ஒன்றினொன்றிலயமா யொற்றுமைப்படுதலோ, அன்றிப் பேயும் பேய்பிடியுண்டவனும்போல ஆவேசத்தா னொற்றுமைப்படுதலோ, அன்றி இந்தனத்தினெரிபோல விளங்காமையா னொற்றுமைப்படுதலோ, அன்றி ஞாயிற்றினொளியில் விளக்கொளிபோலச் சத்தி கெட்டுநிற்றலா னொற்றுமைப்படுதலோ, அன்றித் தலைவனுந் தலைவியும்போல இன்பநுகர்ச்சிமாத்திரையா னொற்றுமைப்படுதலோ, அன்றி நட்டாரிருவர்போல நட்புமிகுதியா னொற்றுமைப்படுதலோ, அன்றி ஆவும் ஆமாவும்போல ஒப்புமைமாத்திரையா னொற்றுமைப்படுதலோ என்று அவ்வச்சமயவாதிகள் மதம்பற்றி நிகழும் இன்னோரன்ன ஐயப்பாடுகளையெல்லாம் நீக்குதற்பொருட்டு, அவனே தானே யாகிய அந்நெறியென உவமையெடுத்துக்காட்டி யோதினார். ஈண்டுக் கூறிய ஒற்றுமைக்கட்படும் இயைபாவதென்னையெனின் அது வருகின்ற சூத்திரத்திற் பெறப்படும்.

இதனுள், அவனேதானே யாகியஅந்நெறி யேகனாகியென்றது ஓரதிகரணம்; இறைபணிநிற்க மலமாயை தன்னொடு வல்வினை யின்றேயென்றது ஓரதிகரணம்; ஆக இரண்டதிகரணத்தது இச்சூத்திரமென்றுணர்க.

## முதலதிகரணம்

ஈண்டுப் பரமேசுரன் இவ்வான்மாவாய் நின்ற முறைமையான் அவனிடத்தேகனாகி நிற்கவென்றது.

மே—ஞானம் பிரகாசித்து முதற்பொருளைக் காண்டன்மாத்திரையே வீடுபேற்றிற்கமையுமெனச் சிவசமவாதசைவர் முதலியோர் மதம்பற்றி நிகழுங்கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தின் முதற்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று.

அவ்வாறு நிற்கவே யானெனதென்னுஞ் செருக்கற்று அவனது சீபாதத்தை யணையுமாகலான்.

ஏ—அஃதெற்றுக்கென்பாரை நோக்கி மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

அங்ஙன மொற்றுமைப்பட்டு நின்றாலே யானும் எனதும் எனப் பகுத்து நிற்கும் மயக்கவுணர்விற் கேதுவாய மலம்நீங்கி அம்முதல்வனது திருவடியாகிய சிவானந்தத்தைப் பெறுமாகலான் அச்செருக்கறுதிக்குக் காரணமாதல்பற்றி ஈண்டுப்பரமேசுரன் இவ்வான்மா வாய் நின்ற முறைமையான் அவனிடத்து ஏகனாகி நிற்கவென மேற்கொண்டது.

அவ்வாறு நில்லாதவழி மலமறாது, அஃதறாதவழிச் சீபாதத்தை யணைதல் பெறப்படாதென்பார் நிற்கவே எனத் தேற்றேகாரத்தாற் கூறினார். யானெனப்படுவது ஞாதிரு. எனதெனப்படுவன ஞானஞேயங்கள்.

நானவன்என் றெண்ணினர்க்கு நாடுமுளம் உண்டாதல்
தானெனவொன் றின்றியே தானதுவாய்—நானெனவொன்(று)
இல்லென்று தானே எனுமவரைத் தன்னடிவைத்(து)
இல்லென்று தானும் இறை.



உ—அங்ஙனம் பகுத்து நின்றுணருமுணர்வை மயக்கவுணர்வென்றதென்னை யென்பாரைநோக்கி ஏதுவை வலியுறுத்துதனுதலிற்று.

நான் அவன் என்று எண்ணினர்க்கும் நாடும் உளம் உண்டாதல் தான் என ஒன்று இன்றியே தான் அது ஆய் - யானென்றும் அவனென்றும் ஞாதிரு ஞேயங்களைப் பகுத்துணர்ந்து நிற்பாற்கும் யானே யென நிற்பார்க்குப்போல அவ்வாறெண்ணுகின்ற உயிருணர்வு முனைத்துத் தோன்றுமாகலான், அவ்வழித்தானென்றொரு முதல் காணப்படுமாறின்றித் தான் அவ்வுணர்வேயாய்,—நான் என ஒன்று இல் என்று தானே எனுமவரைத் தன் அடி இல் என்று வைத்து தான் ஆம் இறை - இனி யானென்றொருமுதல் காணப்படுமாறில்லை யென்றுணர்ந்து முழுவதுந் தானேயெனக் காணுந் தெளிவுடையாரைத் தனது திருவடிவியாபகத்துள் அடங்கி நிற்கச் செய்து அவ்வாறேயாவன் முதல்வன்.

நாடுமுளம் உண்டாயவழித் தானிலனாதலும் அஃதில்வழித் தானுளனாதலும் யாங்ஙனம் பெறுதுமெனிற் காட்டுதும்:—தூலவொளியாகிய கண்ணொளியும் சூக்கும ஒளியாகிய விளக்கொளியும் அத்துவிதமாய்க் கலந்து நிற்குநிலை உற்று நோக்க வல்லார்க்குப் பிரித்தறிய வாராமையிற் கண்ணொளியாக்காணுங்காற் காணுந்தன்மையே முனைத்துத் தோன்றுமாகலின் அவ்வழி விளக்கொளி இருந்தும் இல்லைத்தானே, அன்றி விளக்கொளியாக் காணுங்காற் காட்டுந் தன்மையே முனைத்துத் தோன்றுமாகலின் அவ்வழிக் கண்ணொளி இருந்தும் இல்லைத்தானே; இனிக் கண்ணொளியும் விளக்கொளியுமெனப் பகுத்துக் காணப்புகினும் காணுந்தன்மையே முற்பட்டுத் தோன்றுதலின் அவ்வழி விளக்கொளியைத் திரிவு புலனாக் காட்சிப்படுவதல்லது தெளிவு புலனாக் காட்சிப்படுமாறில்லை; அதுபோலத் தூலவறிவாகிய உயிருஞ் சூக்குமவறிவாகிய சிவமும் அத்துவிதமாய்க் கலந்து நிற்கு நிலையும் பிரித்தறிய வாராமையின் ஆண்டும் இவ்வாறே கண்டுகொள்க.

இக்கருத்துப்பற்றியன்றே *"கண்ணொளி விளக்கின் சோதி கலந்திடும் கருத்தொன் றன்றே" †" காண்பானுங் காட்டுவதுங் காண்

* சிவப்பிரகாசம், உண்மை. அ. கண்ணொளிவிளக்களித்து.

† வினாவெண்பா. கக.

பதுவு நீத்துண்மை—காண்பார்க ணன்முத்தி காணார்கள்—காண் பானுங்—காட்டுவதுங் காண்பதுவுந் தண்கடந்தைச் சம்பந்தன்—வாட்டுநெறி வாராத வர்" எனக் கூறினார் புடைநூலாசிரியரும். அற்றேல், இவ்விரண்டனுள் யாது திரிவுகாட்சி யாது தெளிவுகாட்சி யெனின்—கண்ணொளியோடு கூடியவழியும் இது விளக்கொளி இது ஞாயிற்றொளி இது திங்களொளியென அவ்வப்பெற்றியவேயாய்க் காணப்படும்; விளக்கொளி முதலியவற்றின் காட்சி தெளிவு காட்சி யெனவும், அவ்வொளிகளோடு கூடியவழி அவ்வாறொரு பெற்றித் தாய்க் காணப்படாத கண்ணொளியை வேறு காண்டல் திரிவுகாட்சி யெனவும், கண்கூடாக விளங்கிக் கிடத்தலின் இவ்வாறே பொருளி னும் வைத்துணர்ந்துகொள்க. இவ்வாறன்றி, விளக்கொளிமுன்னர்க் கண்ணொளி சத்தி மடங்கிப்போதலின் அது விளக்கொளியைப் போலக் காட்சிப்புலனாகாதாயிற் றென்னாமோவெனின்; என்னும்: என்னை? கண்ணொளி சத்திமடங்கிற்றாயின் விளக்கொளி காட்சிப் புல னாதல் பிறிதொன்றாற் பெறப்படாமையின். அற்றேல், மின்மினித் துணையாயினுந் தானே விளங்கும் இயல்பில்லாத கண்ணுக்கு ஒளிக் குணமுண்டென்பதற்குப் பிரமாணமென்னையெனின்:—அறியாது கடாயினாய்: ஆகாயத்தின் கண்ணதாகிய சத்த குணம் வியஞ்சகத்தா னன்றித் தினைத்துணையானுந் தானென விளங்குமாறின்மையின் அது பற்றி எதிரொலிவடிவாய அவ்வோசையை ஆகாயத்தின் குணமன்று வியஞ்சகப்பொருளின் குணமென்பார் யாருமில்லை. அதுபோலக் கண் ணின்கண்ணதாகிய ஒளியும் வியஞ்சகமுள்வழி விளங்கி அல்லுழி விளங்காமைமாத்திரையே பிறிதில்லையாகலான் அதனைக் கண்ணின் குணமன்றென்றல் அறிவிலாதார் கூற்றேயாமெனவும், அக்கண்ணொளி யாவது தன்னை விளக்குதற்குரிய வியஞ்சகப்பொருள் ஏகதேச மாயின் ஏகதேசமாய் விளங்கியும், அது வியாபகமாயின் வியாபகமாய் விளங்கியும் நிற்பதோரியல்பிற்றெனவும் உணர்க. அஃதங்ஙனமாக, "கண்ணொளி விளக்கின் சோதி கலந்திடும் என்றற்குப் பிரமாண மென்னை: ஒருவிடயத்தின் வீழ்ந்த பலகண்ணொளிகட்குத் தம்முள் இயைபில்லாதவாறுபோல ஒருவயிற்பட்ட கண்ணொளி விளக்கொளி கட்குத் தம்முள் இயைபில்லையென்றலே பொருத்தமுடைத்துப் போலுமெனின்,—அஃதறியாதார் கூற்றேயாமென்றொழிக. என்னை ஒருவிடயத்தின் வீழ்ந்த கண்ணொளிகள் தம்முள் ஒன்றனையொன்று



காணுமாறுமில்லை காட்டுமாறுமில்லை யாகலான் அவை தம்முட் கலத் தற்கு ஓரியைபின்றென்பது ஒக்கும். அவ்வாறன்றிக் கண் விளக்கி னைக் காண்டலும் விளக்குக் கண்ணுக்குக் காட்டலுமாகிய இயைபுண் மையானும், இவ்வியைபு தம்முட் பெறப்படாத கண்ணொளி முத லாயின ஈண்டைக்கு உவமையாதல் செல்லாமையானும், இந்திரியங் கள் தத்தம் விடயத்தோடியைந் தன்றிச் சந்நிதிமாத்திரையான் அவற்றையறிதல் செல்லாதென்பது ஆகமங்களுக்கெல்லாந் துணி பாகலானும் அத்தன்மையவாய கண்ணொளி விளக்கொளிகட்குத் தம்முட் கலப்பில்லையென்றல் காண்டல்விரோதமாகலின் இவ்வாறு உவமைக்கோதியனவெல்லாம் பொருட்கண்ணுமாமாறுணர்ந்து உய்த் துரைத்துக்கொள்க. அற்றேல், ஈண்டெடுத்துக் காட்டிய கண்கள் தம்முள் ஒன்றனையொன்று காணுமாறின்மைபோல உயிர்களுந் தம்முள் ஒன்றனையொன்றறியுமாறில்லை போலுமெனின்; அறியாது கூறினாய்: கண்கள் தம்முள் ஒன்றொன்று காணப்படுமாறில்லை யென்றது விளக்கும் விடயமுங் காணப்படுமாறுபோல வேறியைந்து தனிப்பொருளாய்க் காணப்படுமாறில்லையென்ற துணையேயன்றிப் பிறிதின்மையின், விளக்கொளியைக் கண்காணுங் கால் அதுவதுவாய் நின்று காணும் பெற்றித்தாய்த் தன்னையும் அவ்விளக்கொளிவண் ணமாய்க் காண்டலுண்டென்பது கண்கூடாக அறியக்கிடத்தலின், ஏனைக்கண்களையும் அவ்வாறு காண்டலமையுமாகலான் அதுபோலத் தம்முட்டனித்தியைபில்லாத உயிர்களும் சிவத்தோடியைந்து நின்று தம்மையும் பிறவுயிர்களையும் இவ்வாறுணர்தல் அமைவுடைமையா னென்பது *"நாடியரன்—தன்னாலே தன்னையுங்கண்டு தமைக்காணா ரென்னா மெனவறிவார்." †"தன்னாலே தனையறிந்தாற்—றன்னையுந் தானே காணுந் தனதுவாகி நின்றே." ‡அதிலறி வடங்கி—மன்னிட வியாபியாய வான்பயன்றோன்றும்" §"என்னையுங் கண்டேன் பிறரையுங் கண்டேன்நின்னில் அனைத்தையுங் கண்டேனென்னே—

* சிவஞானபோதம். ௯. சூ. ௧-ம் அதி - "நாடியோர்"

† சிவப்பிரகாசம், உண்மை, ௨௨. தன்னறிவதனு.

‡ சிவப்பிரகாசம். ௨அ. இந்நிலை.

§ பட்டினத்தடிகள், திருவிடைமருதூர் மும்மணிக்கோவை ௧௫. மேவிய.

நின்னைக் காணா மாந்தர் தம்மையுங் காணாத் தன்மை யோரே" எனப்பிறாண்டும் இவ்வாறோதும் அநுபவமுடைய தேசிகர்திருவாக்குகளானும் இவ்வுண்மை யுணர்ந்துகொள்க.

## இரண்டாமதிகரணம்

இனி இறைபணி வழுவாது நிற்கவென்றது.

மே—உடம்பு நிற்குங்காறும் அதுகொண்ட வினைப்பயனும், அதனையநுபவித்தற்குத் துணைக்காரணமாய் உடனிற்கும் முயற்சியும் ஒருவாற்றானும் நீக்கலாகாமையின் அவை அவ்வழியேகனாகி நிற்றற்குத் தடையாதலைக் கடக்குமா றில்லைபோலுமெனச் சுத்த சைவரீறாயினார் மதம்பற்றி நிகழுங்கடாவை யாசங்கித்துச் சூத்திரத்தின் இரண்டாங் கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று. நிற்றலாவது சலியாது நிலைபெறுதலென்பார் வழுவாது நிற்க என்றார். ஈண்டிறைபணியென்றது யாதெனின்,—அஃது ஆசிரியர் தாமே முன்னர்த் தெரித்துரைக்கின்றமையின் இனிது விளங்கும்.

அவனருளாலல்லது ஒன்றையுஞ் செய்யானாகவே அஞ்ஞானகன்மம் பிரவேசியா வாகலான்.

ஏ—ஏகனாகிநிற்றலேயமையும், இறைபணி நிற்றலெற்றுக் கென்பாரை நோக்கி மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

தன்செய்திக்கு முதல்வன் செய்தியை இன்றியமையாத ஆன்மாச் செய்வனவெல்லாம் அவனருளின்வழி நின்று செய்யுமாயின் மாயேயமுங் கன்மமும் ஏகனாகி நிற்றற்குத் தடையாய்வந்து தாக்கா ஆகலான், அவை தாக்காமைப் பொருட்டுச் செய்யப்படு முபாயமாதல்பற்றி இனி இறைபணி வழுவாது நிற்கவென மேற்கொண்டது. மலமின்றாதல் மேற்பெறப்பட்டமையின் ஈண்டஞ்ஞானமென்றது மாயையின் காரியமாகிய மயக்கத்தையென்பது பெற்றாம். உடம்பு நசிக்குமளவும் அவை மாய்வனவன்மையின் அறுமென்னாது பிரவேசியாவென்றார்.

நாமல்ல இந்திரியம் நம்வழியின் அல்லவழி
நாமல்ல நாமும் அரனுடைமை—ஆமென்னில்



எத்தனுவில் நின்றும் இறைபணியார்க் கில்லைவினை
முற்செய்வினை யுந்தருவான் முன்.

உ—உடம்பொடு நிற்பார் நுகர்தற்கு வேண்டப்படும் பிராரத்த வினையும் அதுபற்றியேறும் ஆகாமியவினையும் ஒருதலையானுண்மையின் இறைபணி நிற்றல்பற்றி அவை பிரவேசியாவென்றல் அமைவுடைத்தன்றுபோலு மென்பாரை நோக்கி ஏதுவை வலியுறுத்துதனுதலிற்று.

இந்திரியம் நாம் அல்ல - வினைகளை நுகர்தற்கும் ஈட்டுதற்குங் கருவியாகிய இந்திரியங்கள் மாயேயமாவனவன்றி யாமாவனவல்ல,—நம் வழியின் அல்ல - அவை தொழிற்படுதலும் முதல்வன்வயத்தனவன்றி நம் வயத்தனவல்ல,—வழிநாம் அல்ல (நம்வழியின் அல்ல) - வினைநிகழ்ச்சிக்கு வாயிலாகிய விடயாதிகளும் அவ்வியந்திரியங்கள் போல மாயேயமாவனவன்றி யாமாவனவல்ல. அவை சேட்டித்தலும் முதல்வன்வயத்தனவன்றி நம் வயத்தனவல்ல,—நாமும் அரன் உடைமை - அவற்றோடியைந்துநின்று வினைகளை யீட்டுதற்கும் நுகர்தற்கும் வினைமுதலாகிய யாமும் ஞானச்செய்திகளை முதல்வன் விளக்கியவழி விளங்கி அல்லுழி விளங்குமாறின்மையான் அம்முதல்வன் வயத்தாராவேமல்லது சுதந்திரராவேமல்லேம்,—ஆம் என்னில் - என்றிங்ஙனம் பசுபாசங்களதியல்பை உள்ளவாறுணர்ந்து செய்வனவெல்லாம் அவனருளின்வழி நின்று செய்யுஞ் செயலாகக் கண்டுகொண்டிருப்பாராயின்,—இறைபணியார்க்கு எத்தனுவின் நின்றும் வினை இல்லை - இவ்வடிமைத் திறமுடையார் எவ்வுடம்பினின்று எவ்வினைகளைச் செய்யினும் அவர்க்கு அவை பந்தமாதலில்லை,—முன்செய்வினையும் தருவான் முன் - அவ்வாகாமியவினையை அவினாபாவமாய் உடன்கொண்டு வருவதாகிய பிராரத்தவினையுந் தன்னைக் கூட்டுவிக்கு முதல்வன் சந்நிதியின் உடலூழாய்க்கழியும். சஞ்சிதவினை தீக்கை செய்தமாத்திரையே எரிசேர்ந்த வித்துப்போலக் கெட்டொழிதலின் ஈண்டு முற்செய்வினை யென்றது ஏற்புழிக்கோடலாற் பிராரத்தவினை மேற்றாயிற்று.

சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடனாதல்
சார்ந்தாரைக் காத்தும் சலமிலனாய்ச்—சார்ந்தடியார்

தாந்தானாச் செய்துபிறர் தங்கள்வினை தான்கொடுத்தல்
ஆய்ந்தார்முன் செய்வினையும் ஆங்கு.

உ—இறைபணியார்க்கு உளவாகிய முற்செய்வினை ஏனையோர்க்குப்போலன்றித் தருவான்முன்னா யொழியுமாயின் அங்ஙனம் இருவேறு வகைப்படச் செய்யுமுதல்வன் நடுநிலைமையன்றிக் கோட்டமுடையனெனப்பட்டு வழுவாம்போலுமென்பாரை நோக்கி வழுவன்மைகூறி அதனை வலியுறுத்துதனுதலிற்று.

சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடன் ஆதல் சார்ந்தாரைக் காத்தும் - தம்மாட்டு அடைக்கலமெனச் சார்ந்தாரை அவர்க்கு வருமேதத்தை நீக்கிக் களைகணாய்நின்று காப்பது தலைமைக்குணமுடையராயினார்க்குக் கடமையாகலான் முதல்வன் ஏனையோரையொழித்துத் தன்னைச் சார்ந்தாரை அங்ஙனம் பாதுகாப்பானாகியும்,—சலம் இலன் ஆய் - அதுபற்றிக் கோட்டமுடையனல்லனாய்,—சார்ந்து அடியார் தாம் தானாச்செய்து பிறர் தங்கள் வினை தான் கொடுத்தல் - தன்னைச்சார்ந்து தன்னடித்தொழில் செய்வார் தன்போல் ஆகாமியவினைத் தொடக்கிலராகச் செய்து பிறர்க்கு வருமாகாமியவினையை அவர்க்குக் கொடுப்பானாகலான்,—ஆய்ந்து ஆர் முன்செய்வினையும் ஆங்கு - அவ்விருதிறத்தோர் மாட்டும் நுணுகிவந்து கூடுவதாய பிராரத்தவினையும் அவ்வாறே செய்வோர் செய்திக்குத் தக்க பயனாய் இருவேறுவகைப்படச்செய்வன்.

இறைபணியார்க்கில்லை வினை முற்செய்வினையுந் தருவான் முன்னென்றதுபற்றி ஏனையோர்க்கு நியதி செய்தூட்டி இறைபணியார்க்கு வினையின்றாகச் செய்தல் இறைவனுக்கு நடுவுநிலைமையன்றென்பாரை நோக்கி, அதனை உடன்பட்டே அமைதி கூறுவாராய்ச் சார்ந்தாரைக்காத்தல் தலைவர் கடனெனப் பழமொழியெடுத்துக்காட்டி இஃதவ்வாறு நடுவன்மையு மன்றென வலியுறுத்துவார் சார்ந்தடியார் தாந்தானாச் செய்து பிறர் தங்கள் வினை தான் கொடுத்தலென வேறுவமை யெடுத்துக்காட்டினார். சார்ந்தடியார் தாந்தானாச்செய்து பிறர் தங்கள் வினை தான் கொடுத்தலுண்டென்பதூஉம், அது கோட்டமின்று நடுவு நிலைமையே யாமென்பதூஉம் ஏனைச் சமயத்தார்க்கும் ஒப்பமுடிந்தமையின், அஃதீண்டைக்கு உவமையாயிற்று.



சலம் வஞ்சனை ; அஃது ஈண்டுக் கோட்டத்தின்மேனின்றது. பிராரத்தவினை அதிசூக்குமமாய் வருவதாகலின் அதனியல்பறிதல் அரிதென்பார் ஆய்ந்தார் முன்செய்வினையுமென்றார்.

இங்குளி வாங்கும் கலம்போல ஞானிபால்
முன்செய் வினைமாயை மூண்டிடினும்—பின்செய்வினை
மாயையுடன் நில்லாது மற்றவன்றான் மெய்ப்பொருளே
ஆயவத னாலுணரும் அச்சு.

உ—இறைபணி நிற்பார்க்குப் பிராரத்தவினை தாக்குதலுண்டென்பார்க்குத் *"தினைத்துணை யேனும் பொறேன் துயராக்கையின் திண்வலையே." என்றற்றொடக்கத்தான் அவர் கூறுந் திருவாக்குக்களே சான்றாகலின், அஃதவர்க்குச் செய்வோர் செய்திப் பயனா யொழியுமென்றல் அமையாமையின் அஃதுண்டாகவே அதுபற்றி நிகழும் ஆகாமியமும் பிறவிக்கு வித்தாய் நிலைபெறுதலுண்டுபோலுமென்பாரை நோக்கி ஆண்டுப் பிராரத்தவினை தாக்குதற் கேதுக்கூறி அதுபற்றிச் செய்வோர் செய்திப்பயனா யொழிதற்கு இழுக்கில்லையென வலியுறுத்துதனுதலிற்று.

இங்குளி வாங்கும் கலம்போல - தன்பால் வைத்தெடுக்கப்பட்டொழிந்த பெருங்காயத்தினின்றும் அதன் வாசத்தை வாங்கிக்கொள்ளும் பாசனத்தின்கண் அவ்வாசம் மங்கிப்போய் மெலிதாய்க் கந்திக்குமாறுபோல,—ஞானிபால் முன் செய் வினை மாயை மூண்டிடினும் - இறைபணி நிற்குந் தத்துவ ஞானிக்குப் பயிற்சி வயத்தான் ஓரோவழி நாடுமுள முண்டாதலும் உண்மையின் அதுபற்றிப் பிராரத்தவினையும் அதற்கு வாயிலாகிய உடம்பு முதலிய மாயேயமும் மங்கிப்போய் வாசனைமாத்திரையாய் மெலிதாய் வந்து மூளுமாயினும்,—பின்செய் வினை மாயையுடன் நில்லாது - அம்மூட்சிபற்றி ஒருதலையானிகழ்வதாகிய ஆகாமியவினை மேலைக்கு வித்தாய் நிலைபெற்று முறுகுதலின்றித் தனக்கு வாயிலாகிய மாயேயத்தோடு கெட்டொழியும்,—அவன் தான் மெய்ப்பொருளே ஆயவதனால் மற்று அச்சு உணரும் - இறைபணி நிற்கும் அவன் சத்தாயுள்ள சிவமேயாயவாற்றால் ஓரோவழி

* திருவாசகம், நீத்தல் விண்ணப்பம், [illegible]த்துணை

187106.

அவ்வாசனைபற்றிப் பிறழவரினும் பிறழவொட்டாத அவ்வச்சினையே நோக்கி நிற்பனாகலான்.

ஒளி இருளைத் துரக்குமாறுபோல அவ்வுணர்வு அவ்வாகாமியத்தைத் துரக்குமென்பதாம். *"தொல்லையில் வருதல்போலத் தோன்றிரு வினையதுண்டே—லல்லொளி புரையுஞானத் தழலுற வழிந்து போமே" எனப் புடைநூலாசிரிய ரோதியதூஉம் அது. பிறழ விடாமைபற்றி மெய்ப்பொருளை அச்சாக உருவகஞ் செய்தார்.

நண்அனல் வேவாத நற்றவர் தம்மினும்
பண்அமர மாச்செலுத்தும் பாகரினும்—எண்ணி
அரனடி ஓர்பவர் ஐம்புலனிற் சென்றும்
அவர்திறன் நீங்கார் அதற்கு.

உ—முன் செய்வினை மாயை மூண்டவழியும் அந்நிலையிற் பிறழாத அவ்வச்சினையே யுணர்ந்து நிற்றல் யாங்ஙனமென்பாரை நோக்கி உவமை முகத்தான் அதனை வலியுறுத்துதனுதலிற்று.

நண் அனல் வேவாத நற்றவர் தம்மினும் பண் அமர மாச் செலுத்தும் பாகரினும் - அங்கித்தம்பனத்தால் நண்ணனல் வேவாமைக் கேதுவாகிய நற்றவமுடையார் அவ்வனலுட்கிடப்பினுந் தந்திறலினீங்காத வாறுபோலவும் பண்ணுதலமரப் பரிமாவூர்தற்குரிய பாகநூல் கற்றுவல்லார் அப்பரிமாவின் வேகத்துட்படினுந் தந்திறலினீங்காத வாறுபோலவும்,—எண்ணி அரன் அடிஓர்பவர் - ஐம்புலன்களில் அகப்படாமைக்கு உபாயம் யாதென்றெண்ணி முதல்வன் திருவடியாகிய அச்சையுணரவல்லார்,—ஐம்புலனில் சென்றும் அதற்கு அவர் திறல் நீங்கார் - முன் செய்வினை மாயை மூட்சிபற்றி ஐவகைப்பட்ட விடயங்களிற் சென்றாராயினும் அதனால் அவர் தந்திறலிற்றீர்ந்து பந்தத்தொடக்குறுவாரல்லர். பொருள்வினை உவமையினுஞ் சென்றியைந்தது. நண்ணனல் கீழ்நீர்போல முன்பின்னாகத் தொக்க ஆறும் வேற்றுமைத்தொகை. நள்ளனல் நண்ணனலென மரீஇயிற்று; †"நீணுலகெலாம்" என்றாற்போல. தம்மால் நண்ணப்படும் அனலென்றுரைப்பினுமமையும். பண்ணுதல் - கதிப்பித்தல்.

* சிவப்பிரகாசம், உண்மை. ௯௧. எல்லையில் பிறவி.

† திருநாவுக்கரசு நாயனார் தேவாரம், கோயிற்றிருக்குறுந்



சதசத்தாம் மெய்கண்டான் சத்தருளிற் காணின்
இதமித்தல் பாசத்தி லின்றிக்—கதமிக்(கு)
எரிகதிரின் முன்னிருள்போல் ஏலா அசத்தின்
அருகணையார் சத்தணைவார் ஆங்கு.

உ—சார்ந்ததன் வண்ணமாய்ச் சதசத்தெனப்படுமியல்புடையார் அரனடியோரினும் ஐம்புலனிற் சென்றுழி அவற்றிற் றொடக்குண்ணாது திறலுடையராதல் யாங்ஙனமென்பாரைநோக்கிச் சார்ச்சிக்கட்படும் விசேடங்கூறி அதனை வலியுறுத்துதனுதலிற்று.

சதசத்து ஆம் மெய்கண்டான் சத்து அருளின்காணின் - தன்னாற் சாரப்படுவனவாகிய சத்தினும் அசத்தினும் அதுவதுவாதல் பற்றிச் சதசத்தென்னும் தன்னுண்மையையுணர்ந்தோன் சத்தாகிய முதல்வன் திருவருளாலல்லது ஒன்றையுங் காணாய் அவ்வருளின் வழி நின்று காணுமாயின்,—பாசத்தில் இதமித்தல் இன்றி - அவ்வழிப்பாசமாகிய அசத்தின் இதஞ்செய்தலின்மையால்,—சத்து அணைவார் கதம் மிக்கு எரி கதிரின்முன் இருள்போல் ஆங்கு ஏலா அசத்தின் அருகு அணையார் - சத்தாகிய முதல்வனைத் தலைப்பட்டு நிற்பார் சீற்றமிக்கெரியாநின்ற சுடரின்முன்னர் அந்தகாரம்போலச் சத்தெதிர் தனது சத்தி யேற்கமாட்டாத அசத்தாய ஐம்புலனின் மாட்டெய்தி நிற்பாரல்லர்.

இதஞ்செய்தல் பற்றுச்செய்தல். இன்மைக்கேதுக்கூறுவார் கதமிக்கெரிகதிரின் முன்னிருள்போ லேலா வசத்தென்றார். கதமிக்கெரி கதிரென்றது ஒப்புமைபற்றிய உபசாரவழக்கு. *"எல்லையில்லவனெரிதுள்ளி னாலெனவெகுண்டான்" என்பதனானும் ஒப்புமையாதலுணர்க. இதனாற் போந்தது, சத்தும் அசத்துந் தம்முட் சமமல்லவாகலான் அரனடியோர்பவர் ஐம்புலனிற் சென்றாலும் அதுபற்றி "அவர் திறனீங்கா" ரென மேலது வலியுறுத்தவாறாமென்க. ஏகனாகி நிற்றலான் மலமின்றாதலும் இறைபணிநிற்றலான் மாயை வினைகளிலவாதலும் பெறப்பட்டமையின், மலமாயை தன்னோடு வல்வினையின்றே யென்பதனை வேறோரதிகரணமாக வைத்தோதாராயினார்.

---

* அமர்நீதிநாயனார் புராணம். உ௯.

## பதினொராஞ் சூத்திரம்

காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போல்
காணஉள் ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா அன்பின் அரன்கழல் செலுமே.

சூ—பரமேசுரனது சீபாதங்களை யணையுமா றுணர்த்துதனுதலிற்று.

சூத்திரக்கருத்துணர்த்துத னுதலிற்று.

அங்ஙனம் ஏகனாகியிறைபணி நிற்பார்க்கு அறிவிச்சை செயல்கள் விடயித்தற்குரிய தோரியைபு ஆண்டுப்பெறப்படாமையின் விடயமாவ தொன்றில்லைபோலும் என்னும் வாதிகளை நோக்கி விடயித்தலில்வழி ஆண்டுப் புத்தர் கூறுமாலய விஞ்ஞானம்போலச் சூனியமாமெனப்பட்டுக் குணஞ்சூனியமாகவே குணியுஞ் சூனியமாய் முடியுமாகலான் அஃதேலாமையின் ஆண்டவை யியைபுபற்றி விடயிக்குமா றுணர்த்து முகத்தானே பயனிரண்டனுள் முடிவா யெஞ்சி நின்ற சிவப்பேறு கூடுதலாய நிட்டையினியல்புணர்த்துதல் இப்பதினொன்றாஞ் சூத்திரத்தின் கருத்து.

இதனானே, சூத்திரவியைபும் இனிது விளங்கும்.

அற்றேல், ஏகனாகியிறைபணிநின்றார்க்கு இனிச் செய்யக்கடவ தொன்றின்மையானும், இருணீக்கமும் ஒளிவிளக்கமும் உடனிகழ்ச்சியாயவாறுபோலப் பசுத்துவ நீக்கமுஞ் சிவத்துவவிளக்கமும் இடையீடின்றி உடனிகழ்வனவாகலின் வேறோத வேண்டாமையானும், முதனூலுட் சுவாநுபூதியாகிய சிவப்பேற்றைப் பத்தாஞ்சூத்திரத்துட் பாசநீக்கத்தோடு ஒருங்குவைத்தே யோதலானும் அதனையீண்டு வேறு வைத்தோதல் அமையாது போலுமெனின் ;—அறியாது கடாயினாய் : ஏகனாகியிறைபணி நிற்பது துரியநிலைக் கண்ணதாகிய அருணிலையேயாகலின் ஆண்டு மலநீங்கிய துணையானே சுகப்பிரபை மாத்திரையே விளங்குவதன்றி அதீதநிலைக் கண்ணதாகிய சிவத்துவ விளக்கமெனப்படும் பரமசுகம் விளங்காமையின் அது விளங்குதல் அவனருளாலல்லதொன்றையுஞ் செய்யாமை மாத்திரையால் அமையாமையின் அதற்கு வேறுமாண்டுச் செய்யக்கடவதுண்டென்பது தானே போதருதலானும், இருணீக்கத்தின் ஒளிவிளக்கம்போலப்



பசுத்துவநீக்கத்தின் அருள்விளக்கம் மாத்திரையேயன்றி ஆனந்த விளக்கமும் உடனிகழாமையானும், அவ்விரண்டற்கும் வேறுபாடு முன்னர்க் காட்டப்படுமாகலானும், முதனூலிற் பாசக்ஷயம் பண்ணுமாறுணர்த்தியவழிப் பாசநீக்கமாத்திரையே முத்தியெனக்கொண்ட வாதிகளை மறுத்தற்பொருட்டுப் பாசநீக்கம்பெற்றோன் சுவாநுபூதியுடையவனாவனெனப் பதினொராஞ் சூத்திரஞ் செய்தற்குத் தோற்றுவாயாந்துணையே பத்தாஞ்சூத்திரத்திற்செய்துவைத்துச் சுவாநுபூதி நிகழ்ச்சிக்கண் ஓதற்பாலனவெல்லாம் பதினொராஞ் சூத்திரத்துட் கூறுதலின் ஒன்பதாஞ் சூத்திரத்தின்கண் எடுத்துக்கொண்ட ஆன்ம சுத்தி பண்ணுமாறு பத்தாஞ்சூத்திரத்திற் சென்றியைந்து முற்றுப் பெற்றாற்போலப் பத்தாஞ்சூத்திரத்தின் எடுத்துக்கொண்ட சுவாநுபூதிநிலை பதினொராஞ் சூத்திரத்திற் சென்றியைந்து முற்றுப் பெறுதலான் அதன்கண் மலையாமைப்பொருட்டு ஆசிரியர் சுவாநுபூதிமானாவனென்பதனையும் அரன்கழல் செலுமெனப் பதினொராஞ் சூத்திரத்தானே ஒருங்குவைத்தோதினாராகலின் அது மாறன்மையானும், அவ்வாறன்றி மொழிபெயர்த்தல் யாப்பால்நூல் செய்துரைப்பான் புகுந்த ஆசிரியர் வேறுபடச் செய்துரையாராகலானுமென்பது. இதனானே, முதனூலிற் சுவாநுபூதிமானென வாளாகூறியதனைப் பதினொராஞ் சூத்திரத்துப் பத்திசெய்கவென்றதன் பின்னாகக் கொண்டுகூட்டி வைத்துரைத்தலே அதன் கருத்தென்பதூஉம், பெறப்பட்டது. அற்றாகலினன்றே, பத்தாஞ்சூத்திரம் பாசக்ஷயம் பண்ணுமாறுணர்த்திற்றெனவும், பதினொராஞ்சூத்திரம் பரமசிவனது சீபாதங்களையணையுமாறுணர்த்திற்றெனவுங் கருத்துரை செய்ததூஉமென்க. இஃதறியாதார் தத்தமக்கு வேண்டியவாறேயுரைப்ப.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு :—

காட்டக் காணுந் தன்மையுடைய கண் உருவத்தைத் காணும்படி அதனோடொருங்கியைந்து நின்று காட்டி அவ்வுருவத்தைக் காண்கின்ற ஆன்மாப்போல அறிவிக்க அறியுமியல்புடைய அவ்வான்மா விடயத்தை யறியும்படி முதல்வன் அதனோடொருங்கியைந்து நின்று அறிவித்து அறிந்து வருதலான் அவ்வத்துவித நிலையை மறவாது கடைப்பிடித்துச் செய்யும் அன்பானே அம்முதல்வன் திருவடியாகிய சிவானந்தாநுபூதியைத் தலைப்படும்.

காணுமென்னும் உவமையடை பொருளினும், கண்டென்னும்
பொருள்வினை உவமையினும் சென்றியைந்தன. காணவென்பதனை
ஈரிடத்துங்கூட்டுக. *“ வியர்த்து வெகுளார் விழுமியோர் ” என்பது
போலக் கண்டுகாட்டலென்பது மாறிவைத்துரைக்கப்பட்டது. இக்
கருத்துநோக்கியன்றே, இதனைவிரித்துக் கூறுவான் புகுந்த வழி
நூலாசிரியர் †“ காட்டிக்கண் டிடுமாபோலக் காட்டிக்கண்டிடுவன் ”
என்றதூஉமென்க.

அயராமைக்குச் செயப்படுபொருள் அதனையென்றெடுத்துக்
கொள்க. அயராவன்பென்றது அயராமையானாகிய அன்பென
“ஆறுசென்ற வியர்” போலநின்றது. அது ‡“இத்தையாயு மறி
வுடைய னயன்புசெய்ய” என வழி நூலாசிரியர் கூறியதனானு
முணர்க. அறிவிச்சை செயல்களினிகழ்ச்சியாகிய அயராமையும்
அன்பும் செலவும் முறையே காரணகாரியங்களாய் அவ்வொரு
பொருண்மேல் ஒருங்கு நிகழுமென்பார் அயராவன்பினரன்கழல்
செலுமேயென்றார்.

இஃதென் சொல்லியவாறோவெனின்;—உயிரையின்றி யமை
யாதகண் உருவத்தைக் காணுங்கால் உயிரினதுணர்வு கண்ணொளி
யெனத் தானென வேற்றுமையின்றி உடனாய் விரவிநின்று கண்
ணுக்குக்காட்டியவதனைக் கண்கண்டதென்றுங் கண்ணையதிட்டித்து
நின்ற உயிர் கண்டதென்றும் பகுத்தறிய வாராது இரண்டன் காட்சி
யும் ஒன்றனையொன்று விடாது அத்துவிதமாகி ஒருங்கே நிகழுமாறு
போல, முதல்வனை யின்றியமையாத உயிர் ஒருவிடயத்தை அறியுங்
கால் அம்முதல்வனது சிற்சத்தி ஆன்மசிற்சத்தியெனத் தானென்ன
வேறின்றி உடனாய் விரவி நிற்ப முதல்வனும் அவ்வாறு விரவிநின்று
ஆன்மாவிற்கு அறிவித்ததொன்றனை அவ்வான்மா அறிந்ததென்றும்,
அதனையதிட்டித்து நின்ற தானறிந்தானென்றும் பகுத்தறிய வாராது
இருவகையறிவும் ஒன்றனையொன்று விடாது அத்துவிதமாய்
ஒருங்கே நிகழுமாறு செய்துவரும் இவ்வுபகாரம் பெத்தமுத்தியிரண்
டினும் ஒருபெற்றித்தாய் உண்மையின், ஏகனாகியிறைபணி நிற்கு

* நாலடியார், சினமின்மை. ௪. நேர்த்து.

† சிவஞானசித்தியார், பதினொன்றாஞ்சூத்திரம். க. காயமொழி.

‡ சிவஞானசித்தியார், பதினொன்றாஞ்சூத்திரம். க.



முயிர் முதல்வன் அங்ஙனம் அத்துவிதமாய் உபகரித்துநிற்கு முரி
மையை நோக்குமாயின் நோக்குந்தோறும் நோக்குந்தோறும் அப்
பொருட்கட் செல்லுமிச்சை அடங்காது மீதூருமாகலின் அவ்வழி
அவ்விச்சைப் பதானாகவிளங்கித்தோன்றும் பேரானந்தத்தை அநுப
விக்கப்படுமென அறிவிச்சைசெயல்கள் மூன்றுங்கண்டு விடயிக்கு
மாறுணர்த்தி அதீதநிலையியல்பு கூறியவாறுமென்க. அத்துவித
மாவது பேதப்பொருளிரண்டுந் தம்முள் அபேதமாதற்குரிய சம்பந்த
விசேடம். இக்கருத்தேபற்றி *“அறிவொளிபோற் பிறிவருமத்து
விதம்” என்றார் புடைநூலாசிரியரும். அங்கியும் ஒன்றிற் றங்கிநின்
றல்லது தன்றொழினடத்தாதாகலின். அதுபோல முதல்வனும்
உயிரையதிட்டித்து நின்று எத்தொழிலுஞ் செய்வனென்றுணர்க.
உயிர் ஒன்றனையறிதல் முதல்வன் உடனின்றறிதலையின்றி அறிவித்
தன் மாத்திரையான் அமையாதென்பது †“தொண்டனேனினையுமா
நினையே” “விரும்புமாவிரும்பே” “தொடருமாதொடரே” “நுகருமா
நுகரே” என்றிவ்வாறு முத்திநிலைபற்றியோதிய திருவாக்குக்களானு
மறிக. இவ்வியல்புநோக்கியன்றே “அறிவானுந்தானே யறிவிப்
பான் றானே ” என்றோதிய அம்மை ‡“அறிவாயறிகின்றான்றானே”
எனவுமோதியதூஉமென்க. முன்னறிதல் அறிவித்தற்பொருட்
டெனவும் பின்னறிவாயறிதல் விடயத்தில் அழுத்துவித்தற் பொருட்
டெனவுங் கொள்க. இதனையீண்டு வைத்தார் அத்துவிதநிலை இனிது
விளங்குதற்கு.

இவ்வாறன்றிக் காணுங் கண்ணுக்குக் காட்டுமுளம்போற் காண
வுள்ளத்தைக்கண்டு காட்டலென்பதற்குக் காட்டுமுபகாரமுணர்த்தன்
மாத்திரையே கருத்தென்றுரைப்பாருமுளர். இதனைக் கண்ணழித்
துரைப்புழி அவனும் அவற்றது விடயத்தை யுணருமெனக் காணு
முபகாரமாத்திரையே எடுத்துக்கொண்டுரைத்த ஆசிரியர்கருத்தன்
றாகலானும், காணுமுபகாரங் காட்டுமுபகாரத்தின் பின்னர்த்தாய்
நிகழுமென்பது உணர்ந்துகோடற்பொருட்டு அதுவும் உடன்கூறப்
பட்டதன்றி வேறின்மையானும், அவ்வாறன்றென்பார்க்கு ஐந்தாஞ்

* சிவப்பிரகாசம், பாயிரம். ௭. புறச்சமயத்தவர்.

† திருமாளிகைத்தேவர், திருவிசைப்பா, கோயில். கக. ௧0. ௯. ௭.

‡ காரைக்காலம்மையார், அற்புதத்திருவந்தாதி. ௨0.

சூத்திரத்துட் பெறப்பட்டதனை ஈண்டுக் கூறுதல் புநருத்தியாய் முடியுமாகலானும், அவருரைப்பனவெல்லாம் போலியென்றொழிக. அற்றேல், முதனூலிற் பதினொராஞ்சூத்திரத்துட் காட்டுவனென்பது மாத்திரையேயன்றிக் காண்பனென்பது கூறிற்றில்லையா லெனின்;—அறியாது வினாயினாய்: ஆண்டுக் காட்டுவானுமென்ற வும்மை காண்பானுமாமென எதிரது தழீஇ நிற்றலின், கூறாமை யாண்டையதென்றொழிக. அவ்வும்மைக்குப் பொருள் காணமாட் டாதார் பாடம்வேறாக ஓதுப.

இதனுள், காணுங்கண்ணுக்குக் காட்டுமுளம்போற் காணவுள்ளத் தைக் காட்டிக் காண்டலென்றது ஓரதிகரணம்; அதனை அயராவன்பி னரன்கழல் செலுமேயென்றது ஓரதிகரணம்; ஆக இரண்டதிகரணத் தது இச்சூத்திரமென்றுணர்க.

## முதலதிகரணம்

ஈண்டு அவனும் அவற்றது விடயத்தை யுணருமென்றது.

மே—முதல்வன் உயிர்க்குக் காட்டுமுபகார மாத்திரையே யுள்ளதென்னும் வாதிகளை நோக்கி அத்துவித நிலையுணர்த்துதற் கெடுத்துக்கொண்ட சூத்திரத்தின் முதற்கூற்றைக் கண்ணழித் துரைத்து மேற்கோடனுதலிற்று.

முதல்வனும் உயிர்களாலுணரப்படும் விடயத்தை உடனின் றுணருவன் அவையே தானேயாயெனவும் தாந்தமுணர்வின்றமியரு ளெனவும் மேற்பொது வகையாற் கூறிப் போந்த அத்துவிதத்தை ஈண்டுக் காணுமுபகாரத்தின் வைத்துணர்த்தி இனிது விளக்கிய வாறு.

இவ்வான்மாக்கள் அவனையின்றியமைந்து ஒன்றையும் விடயியாவாகலான்.

ஏ—கண் சடமாகலானும் காண்டற்பயன் உயிர்க்கேயாகலானும் கண் காண்புழி உயிரும் உடனின்று காண்டல் பெறப்படும் கண் போல் உயிர் சடமன்மையானும் உணர்தற்பயன் உயிர்க்கேயாக லானும் அதனையெடுத்துக்காட்டி அவனும் அவற்றது விடயத்தை யுணருமென்றல் அமையாதென்பாரைநோக்கி மேற்கோளைச் சாதித் தனுதலிற்று.



விளக்கொளி கண்ணொளியோடு கலந்து கண்ணொளியோடு கூட உருவத்தினுங் கலந்தாலன்றி அஃதவ்வுருவத்தைக் காண்ட லின்றாய வாறுபோல அறிவிக்கவறியும் இயல்பினவாய உயிர்களும் முதல்வனதுணர்வு தம்மோடு விரவிநின்று தம்மோடு கூடச்சென்று விடயத்தினும் விரவிநின்றால் அறிவு விளங்கி அதனையறியும் இயல் பினவன்றித் தனித்தமையவுமாட்டா, தனித்தொன்றனை விடயிக்கவு மாட்டாவாகலான் அறிவு விளங்குதன்மாத்திரைக்கேயன்றி விடயத் தைப் பற்றுதற்கண்ணும் முதல்வன் உடனின்றறிதல் ஒருதலையான் வேண்டப்படுதலான் ஈண்டு அவனும் அவற்றது விடயத்தை யுணரு மென மேற்கொண்டது.

அவனையின்றி யமையாமையிற் காட்டுமுபகாரம் விளங்கினாற் போல அவனையின்றி யொன்றையும் விடயியாமையிற் காணுமுப காரம் இனிது விளங்குமென்பார் அவனை யின்றி யமைந்தொன்றை யும் விடயியாவாகலானென்றார். அமைந்து விடயியாவென்றதனைக் *“ கந்தித்துச் சுழலும் ” என்றாற்போலக் கொள்க.

விடயியா என்றது பெயரடியிற் பிறந்த எதிர்மறைவினை. †“ எவ்விடத்து மிறையடியை யின்றியமைந் தொன்றையறிந் தியற் றிடா வுயிர்களீசன் றானுஞ்—செவ்விதினி னுளம்புகுந்து செய்தி யெலா முணர்ந்து சேட்டிப்பித் தெங்குமாய்ச் செறிந்து நிற்பன்— இவ்வுயிர்க டோற்றும்போ தவனையின்றித் தோற்றா விவற்றினுக்கம் முதலெழுத்துக் கெல்லாமாய் நிற்கு—மவ்வுயிர்போ னின்றிடுவ னாதி லானு மானடியை யகன்றுநிற்ப தெங்கே யாமே ” என வழிநூலாசிரி யர் இதனை விரித்தோதியவாறு முணர்க. எவ்விடத்து மென்றது பெத்தமுத்தியிரண்டினு மென்பதாம். இதனுள், ‘இறையடியையின்றி யமைந் தொன்றையறிந் தியற்றிடாவுயிர்கள்’ எனவும், ‘ஈசன்றா னெங்குமாய்ச் செறிந்து நிற்பன்’ எனவுங் கூறியது விடயத்தின்கட் படு நிகழ்ச்சிக்கெனவும், ‘இவ்வுயிர்கடோற்றும்போ தவனையின்றித் தோற்றா’ எனவும், அவ்வுயிர்போனின்றிடுவன்’ எனவுங்கூறியது உயி ரின்கட்படு நிகழ்ச்சிக்கெனவுங் கொள்க. அவ்வாறு கொள்ளாக்கால் இருகாற்கூறுதல் புனருத்தியாய் முடியுமென்றொழிக. இனி விளக்

* சிவஞானசித்தியார்; பத்தாஞ்சூத்திரம் ௩. அங்கித்.

† ஷை, பதினொராஞ்சூத்திரம் எ.

கொளி கலத்தல் ஈரிடத்தும் வேண்டப்படுமென்பதூஉம், "விளக்கொளி கலந்தவற்றை", *"விளக்கின் சோதி கலந்திடும்" எனப் புடைநூலாசிரியர்வகுத்தோதியவாற்றானுணர்க. அஃதங்ஙனமாக,பரமுத்தியில் உயிர்க்கு விடயமாவது ஒன்றின்மையின் வழிநூலாசிரியர் எவ்விடத்துமென்றது அமையுமாறென்னையெனின்;—அறியாது கூறினாய்: †"சுத்தவநு போகத்தைத் துய்த்தலனு" ‡"ஒன்றிநின்றுணரு முண்மை." எனப் பிறாண்டும் இவ்வாறே யோதுபவாகலின், பரமுத்தியில் உயிர் சிவானந்தாநுபூதியை விடயித்தலுண்டெனவும், அது முதல்வனை இன்றி யாகாமையின் அவனும் ஆண்டவ்வநுபூதியை உடனின்றறிவனெனவுமுணர்க.

ஐந்தையும் ஒக்க உணரா(து) அவற்றுணர்வ(து)
ஐந்தும்போல் நின்றுணரும் ஆகலான்—ஐந்தினையும்
ஒன்றொன்றாப் பார்த்துணர்வ துள்ளமே எவ்வுலகும்
ஒன்றொன்றாப் பார்க்கும் உணர்ந்து.

உ—அவனும் அவற்றது விடயத்தை யுடனின்றுணருமாயின் அவற்றோடு அவனிடையறிதற்கட்படும் வேற்றுமை இல்லைபோலுமென்பாரை நோக்கி வேற்றுமையுங்காட்டி அதனை வலியுறுத்துதனுதலிற்று.

உள்ளமே - ஆன்மாவானது,—அவற்று ஐந்தும்போல் நின்று உணர்வது உணரும் ஆகலான் - சுவையொளியூறோசைநாற்றமென்னுமைந்தினும் ஐம்பொறிபோல் அதுவதுவாய்ச் செறிந்து நின்று உணர்தற்பாலதனை உணருந்தன்மைத்தாகலான்,—ஐந்தையும் ஒக்க உணராது ஐந்தினையும் ஒன்று ஒன்று ஆப் பார்த்து உணர்வது - அவ்வைம்புலன்களையும் ஒருங்கே யுணரமாட்டாது அவ்வைந்தினையும் ஓரோவொன்றாயறிந்தநுபவிப்பதாம்,—ஒன்றுஎவ்வுலகும்ஒன்றா உணர்ந்துபார்க்கும் - அதுபோலச் சார்ந்ததன்வண்ணமாய்ப் பலதிறப்படுதலின்றி என்றுமொரு பெற்றித்தாகியசிவம் எல்லாவுயிர்களுடைய எல்லா விடயங்களையும் பொதுவகையான் ஒருங்கேயுணர்ந்து அவ்வுயிர்களுடனின்று சிறப்புவகையானு மறியும்.

* சிவப்பிரகாசம், உண்மை அ. கண்ணொளி.
† உண்மைவிளக்கம். ருக; முத்திதனில்.
‡ சிவப்பிரகாசம், உண்மை. நஎ.'ஒன்றிரண்டாகி.



ஏகமாய் நின்றே இணையடிக ளொன்றுணரப்
போகமாய்த் தான்விளைந்த பொற்பினன்—ஏகமாய்
உள்ளத்தின் கண்ணானன் உள்குவார் உள்கிற்றை
உள்ளத்தாற் காணானே உற்று.

உ—ஆன்மா ஐம்பொறியை விடயிப்புழிப்போல முதல்வனை விடயிப்புழியும் முதல்வன் அவ்வாறுடனின்று தன்னைத்தான் வி யிப்பனெனின் ஆன்மாச்சிரயமென்னுங் குற்றமாமாகலின் அ பெறப்படாமையான் அவனும் அவற்றது விடயத்தையுணருமெ றல் யாண்டுஞ்செல்லாதென்பாரை நோக்கி ஆண்டும் அவ்வாறுணர் லுண்டென்பதுணர்த்தி அதனை வலியுறுத்துதனுதலிற்று.

ஒன்று ஏகம் ஆய் நின்று இணை அடிகள் உணரவே தா போகம் ஆய் விளைந்த பொற்பினன் - முதல்வனைச் சார்ந்தவழி அ வண்ணமேயாய் ஒருபெற்றிப்பட்ட ஆன்மா அவனோடொற்றுமை பட்டுநின்று அவனதடியிணைகளை யுணரவே தான் அவ்வான்மாவு குப் பரபோகமாய் மேன்மேல் விளைகின்ற பொலிவினையுடையன லானும்,—உள்ளத்தின்கண் ஏகம் ஆய் ஆனன் - அங்ஙனமுணருங்கா அவ்வான்மஞானத்தினிடத்து ஏகமாய்விட்டு நீங்காதவனாகலானும்,— உள்குவார் உள்கிற்றை உள்ளத்தான் உற்றுக் காணானே - கருதுவா கருதிய பொருளாகிய தன்னை அவரறிவோடு கூடி நின்றறியா கொல்லோ.

போகமாய்த் தான் விளைந்த பொற்பினன், ஏகமாயுள்ளத்தி கண்ணானன் என்னும் பெயரடைகள் ஏதுப்பொருளவாய் நின்றன.

யாண்டுஞ்சேற லுணர்த்துதற்கு உள்குவாருள்கிற்றையென்றார் * "வேண்டுவார் வேண்டியதே யீவான்" என்றாற்போல. ஆன்மா கள் முதல்வனை விடயிக்குங்கால் அவற்றது விடயமாகிய அவன் தன னாலும் உடனின்றுணரப்படுவன், உள்குவாருள்கிய பொருளாகலின்

மேலைவெண்பாவிற் கூறிப்போந்த ஐம்புலன்போலவென்ற அனுமானவளவை காட்டுவார் உள்குவாருள்கிற்றை யுள்ளத்தானு றுக் காணானேவென்றும், உள்குவாருள்கிற்றாதல் ஈரிடத்துமொக்கு

* திருநாவுக்கரசுநாயனார்தேவாரம், திருமறைக்காட்டுத் திருத் தாண்டகம். க.

மென்பார் 'ஏகமாய்நின்றே யிணையடிக ளொன்றுணரப் போகமாய் தான்விளைந்த பொற்பினான்' என விடயித்தற்கட்படுமியல்பும் ஏகமா யுள்ளத்தின்கண்ணானென அறிவு விளங்குதற்கட்படுமியல்பும் எடுத்தோதினார். பரபோகமாயென்னாது போகமாயென்றதும் ஒப் புமையிணங்குதற்பொருட்டு சேற்றுநிலம்மிதித்துச் சென்றானுக்கு வன்னிலம்போலப் பரபோகவிளைவுசெயற்கைப் பொருளாய் நிற்ற லின், ஆக்கமுங் காரணமும் அடுத்து வந்தது. இணையடிகளுணருந் தோறும் போகம் மேன்மேல் விளைதல் *"புணர்ந்தாற் புணருந் தொறும் பெரும்போகம் பின்னும் புதிதாய்—மணந்தாழ் புரிகுழ லாளல்குல் போல வளர்கின்றதே'' எனவும் அப்பொருண்மேல் வைத்தோதிய திருவாக்கானுமறிக. தெளிவுபற்றி விளைந்தவென இறந்தகாலத்தாற் கூறினார். கண் கண்ணாடியினின்றுந் தன்னை விடயித்தாற்போல முதல்வன் ஆன்மாவுடனின்று தன்னை விடயித் தல் பொருத்தமுடைமையின், ஆன்மாச்சிரயமென்னுங் குற்றம் இன்னோரன்னவற்றிற் கெய்தாதென்றுணர்க. கண்ணாடிக்குள்ளாகத் தோன்றுவதுபோலும் எதிர்விம்பமாவது விம்பமேயன்றி வேறன் றென்பது சிவாகமநூற்றுணிபென்க.

இதனுள் அவனும் அவற்றதுவிடயத்தையுணருமென உணர்வே பற்றியோதினாரேனும் †"எத்திற ஞானமுள்ள தத்திற மிச்சை செய்தி'' என்பவாகலின் அவற்றிற்கும் இஃதொக்கும்: ஒக்கவே, பெத்தமுத்தியிரண்டினும் ஆன்மா விடயிக்கப்படும் விடயங்களை முதல் வன் உடனின்று விடயிப்பனென்பதூஉம், பெத்தத்தின் அவனிவ னாய் நின்று விடயித்தலின் விடயங்கள் அவனுக்கன்றி இவனுக்காயின முத்தியின் இவனவனாய் நின்று விடயித்தலின் அவனொழிந்த விட யங்களெல்லாம் இவனுக்கின்றி அவனுக்காயினவென்பதூஉம் இனிது விளங்கும். இம்முறைமை நோக்கியன்றே உலகத்துள் ஒன்றனை ஈவாரும் ஏற்பாருஞ் சிவார்ப்பணமெனக் கருதாதவழிக்குற்றமென்று ஆகமங்களோதியதூஉம், ‡"யாதொரு தெய்வங்கொண்டீ ரத்தெய்வ மாகி யாங்கே—மாதொரு பாகனார்தாம் வருவர்'' என்றதூஉம், அவ்

* திருச்சிற்றம்பலக்கோவையார். கூ. உணர்ந்தார்க்

† சிவஞானசித்தியார், முதற்சூத்திரம். கூஉ. சத்திதன்வடி.

‡ ஷை, இரண்டாஞ்சூத்திரம். உரு.



வுண்மையறிந்தவழி 'எத்தனுவி னின்று மிறைபணியார்க் கில்லை வினை—முற்செய்வினையுந்தருவான் முன்.'' *"பெற்றசிற் றின்பமே பேரின்பமாய்'' †"உடம்புடைய யோகிகடா முற்றசிற்றின்ப—மடங் கத்தம் பேரின்பத்தாக்கி'' ‡"காணுங் கரணங்களெல்லாம் பேரின்ப மெனப்—பேணு மடியார்'' "எல்லாஞ் சிவமாயிருந்ததே.'' என இவ்வாறோதியதூஉமென்க.

## இரண்டாமதிகரணம்

இனிப் பத்தியினான் மறவாதேத்த அவனது சீபாதத்தை யணையுமென்றது.

மே—ஏகனாகி நின்றார்க்கு அவ்வியைபுபற்றி அறிவிச்சை செயல்கண்மூன்றும் ஆண்டு விடயிக்குமாறு யாங்ஙனமென்பாரை நோக்கி நிட்டையி னியல்புணர்த்துதற்கெடுத்துக்கொண்ட இரண் டாங்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று.

சூத்திரத்துரைத்தவாறுபற்றி யுரைத்துக்கொள்க.

§"இத்தை யாயுமறி வுடையனா யன்புசெய்ய'' என வழிநூலா சிரியரு மோதுதலின் ஈண்டுமறவாது பத்தியினாலேத்தவெனச் சூத்தி ரப்பொருட்கேற்ப மாறிவைத்துரைத்துக்கொள்க. ஏத்தவென்றது உபசாரவழக்கு. அன்பு பத்தி காதலென்றாற்போல்வன இச்சை மீதூர்தற் பொருளவாகலான், அது பரமுத்தியினுமுண்டென்பதுணரா தார் பத்தியாவது சீவன் முத்தி நிலைக்கே செய்யப்படுவதொரு சாதனம்போலுமென மயங்கித் தத்தமக்கு வேண்டியவாறே யுரைப்ப. பரமுத்தியின்கண் இச்சை நிகழாதவழிச் சிவபோகம் அநுபவமாதல் செல்லாமையானும், சீவன்முத்திநிலைக்கே கூறுவதொன்றாயிற் "செம் மலர் நோன்றாள்'' என்னுஞ் சூத்திரத்து ஒருங்குவைத்தோதவமை யும், சூத்திரம் வேறுசெய்ய வேண்டாமையானும், அவ்வுரை போலி யென்றொழிக.

* திருவுந்தியார். ஙங.

† திருக்களிற்றுப்படியார். எசா.

‡ திருவாசகம், பண்டாயநான்மறை. சா.

§ சிவஞானசித்தியார், பதினொராஞ்சூத்திரம். க. காய.

அவன் அன்னியமின்றிச் செய்வோர் செய்திப்பயன் விளைத்துநிற்றலான்.

ஏ—பத்தியினுன் மறவாதேத்தினும் அவனது சீபாதத்தை யணைதல் பரமுத்தியினன்றி முடியாதென்பாரை நோக்கி மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

அம்முதல்வன் வேறு நில்லாது செய்வோர் செய்வனவற்றை யறிந்து அவ்வச்செய்திக்குத் தக்க பயனை மிகச் செய்யலாயின் அவ்வப்பொழுதே விளைவித்தும் அல்லுழிக் காலாந்தரத்தின் விளைவித்தும் உடனாய் நிற்பனுகலான் இனிப் பத்தியினுன் மறவாதேத்தவே அம்முதல்வனது சீபாதத்தை யணையுமென மேற்கொண்டது.

அருக்கன்நேர் நிற்பினும் அல்லிருளே காணார்க்(கு)
இருட்கண்ணே பாசத்தார்க் கீசன்—அருட்கண்ணால்
பாசத்தை நீக்கும் பகல்அலர்த்தும் தாமரைபோல்
நேசத்தில் தன்னுணர்ந்தார் நேர்.

உ—அரன் கழல் சேறல் உடம்பினீங்கிய பின்னன்றி உடம்புடையவழியுங் கூடுமாயின் அது ஞாயிற்றினொளிபோல மருங்குள்ளார்க்குப் புலனுதல் வேண்டுமென்பாரை நோக்கி அது கூடாமையுங் கூடுமாறும் உவமை முகத்தானுணர்த்தி எதுவை வலியுறுத்துதனுதலிற்று.

அருக்கன் நேர் நிற்பினும் காணார்க்கு அல் இருளே - ஞாயிறு எல்லார்க்கும் ஒப்பநிற்பினும் அது காட்சியுடையார் கண்ணுக்கன்றி அஃதில்லாதார்கண்ணுக்கு இரவின்கண்ணதாகிய இருளேயாம். அது போல,—ஈசன் பாசத்தார்க்கு இருட்கண்ணே-முதல்வன் எங்கணும ஒப்ப நிற்பினும் மலநீங்கிய முத்தர்க்கன்றி அஃதுடையார்க்கு அவன் அம்மலத்தின் கண்ணே யாவன். சீவன்முத்தரும் ஏனையோர்போல உடலுடைமையிற் பாசத்தாராகலின் வேற்றுமையின்றாலெனின்,—பகல் அலர்த்துந் தாமரைபோல் - ஏனைத் தாமரைகளோடொப்ப ஒருங்குநிற்பினும் பக்குவமுடைய தாமரையைக் கூம்புதலை நீக்கி அலர்த்து ஞாயிறுபோல,—நேசத்தில் தன் உணர்ந்தார் நேர் அருட்கண்ணால் பாசத்தை நீக்கும் - ஏனையோர்போல் உடம்போடு நிற்பினும் பருவமுடையாராய்ப் பத்தியினுற்றன்னை மறவா துணர்வார்க்கு



முதல்வன் தனது திருவருட்பார்வையாற் பாசத்தை நீக்கி அறிவை யலர்த்தும் ஆகலான் உடம்புள்வழியும் அவர்பாசத்தாரல்லர்.

திணிந்தவிருளை யென்பார் அல்இருளென்றார். மலத்திற்குக் கண்ணாவது அறியாமை. நீக்குதலும் அலர்த்துதலும் ஏனையிடத்துஞ் சென்றியைதலின், ஈரிடத்துஞ் செயப்படுபொருளேற்பன வருவிக்கப்பட்டன.

மன்னும் இருளை மதிதுரந்த வாறன்பின்
மன்னும் அரனே மலந்துரந்து—தன்னின்
வலித்திரும்பைக் காந்தம் வசஞ்செய்வான் செய்தல்
சலிப்பில் விகாரியலன் தான்.

உ—நேசத்திற் றன்னுணருஞ் சீவன்முத்தர்க்குப் பாசத்தை நீக்கி அறிவை யலர்த்துதல் பரமுத்தியினன்றி இல்லையென முரணிக்கூறும் வாதிகளைநோக்கிப் பாசத்தை நீக்கி அறிவையலர்த்து முறைமை இவ்வாறென்றுணர்த்தி அதனை வலியுறுத்துதனுதலிற்று.

அன்பின் மன்னும் அரனே மன்னும் இருளை மதிதுரந்தவாறு மலம் துரந்து - உயிரைத் தானுக்கிக்கோடற்கணுளதாகிய இச்சை மிகுதியான் அவ்வுயிரோடும் அநாதியே நிலைபெறுமுதல்வன் கண்ணின்கணிலை பெறும் இருளைப்பிறைமதி நாடோறுஞ் சிறிது சிறிதாக நீக்கியோட்டுமாறுபோல் அவ்வுயிரின் கண்ணதாகிய மலசத்தியை அவ்வப்பருவந்தோறுஞ் சிறிது சிறிதாகச் சோபானமுறையினீக்கிப் பற்றறத் துரந்து,—காந்தம் இரும்பைத் தன்னின் வலித்து வசம் செய்வான் செய்தல் சலிப்பு இல்-காந்தக்கல் இரும்பைத் தன்கணீர்த்துத் தன்வசமாகச்செய்தல்போல மலம் அங்ஙனந் துரக்கப் படுந்தோறும் அம்முறையே அச்சத்தி பதிவித்து உயிரைத்தன்கண் வலித்துக்கொண்டு தன்வசமாகச்செய்து வருஞ்செய்கையின் அவனுக்கு ஒருஞான்றுஞ் சலிப்பில்லை,—விகாரி அலன்தான் - அங்ஙனஞ் சலியாது செய்து வருதல்பற்றி விகாரியாவானுமல்லன் காந்தம் போலத் தனது சந்நிதிமாத்திரையிற்செய்யும் அம்முதல்வன்.

மதியென்றது ஏற்புழிக்கோடலான் ஈண்டு வளர்பக்கத்திற் றிங்களின்மேற்றாயிற்று. *"அந்த வருளுனக்கிங் காதாரமாயல்லி—னிந்து வெனவெறித் திட்டு" என்றதும் அது. மலந் துரத்தல் உயிரின்

* துகளறு போதம் - ருரு.

செயலாகுவதன்றென்பதுபட நின்றமையின் ஏகாரம் பிரிநிலைக்கண் வந்தது. வான் பான் பாக்குக்கள் தொழிற்பெயர் விகுதியுமாமென் பது *"காப்பாக்கறிந்து" என்பதனானுணர்க. சலித்தல் வேசறுதல். மதிதூரந்தவாறு மலந்தூரந்தென்றவிதனானே மலம்நீங்குவது பின்னென்பார் மதம் மறுக்கப்பட்டவாறு காண்க. சோபானமுறையினீக்குதலானன்றே, †சத்திநிபாதஞ் ‡சிவபுண்ணிய முதலாயின நால்வேறுவகைப்பட்டதூஉம், அவற்றுள்ளும் ஒரோவொன்று நந்நான்காய்ப் பதினாறுவகைப்பட்டதூஉம், அவற்றுள்ளும் ஒரோவொன்று பலவேறுவகைப்பட்டு விரிந்ததூஉமென்க.

நசித்தொன்றின் உள்ள நசித்தலால் ஒன்றா
நசித்திலதேல் ஒன்றாவ தில்லை—நசித்துமலம்
அப்பணைந்த உப்பின் உளமணைந்து சேடமாம்
கப்பின்றாம் ஈசன் கழல்.

உ—உயிருக்குக் குணம்போல அநாதியாயுள்ள சகசமலம் அவ்வுயிரின் வேறாய்த் தூரக்கற்பாலதன்றாகலின் மலந் தூரந்தென்றது அமையாதென்னும் பாடாணவாதசைவரை நோக்கி அருத்தாபத்தியளவையான் அதனை வலியுறுத்துதனுதலிற்று.

* திருக்குறள், காதற்சிறப்புரைத்தல் ௬.

† சத்திநிபாதம்—மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரமென நால்வகைப்படும்; அவற்றிற்கு முறையே தீக்ஷைபெற்றவுடனே மயிர்க்கூச்சுண்டாதலும், சரீரநடுங்குதலும், மூர்ச்சித்தலும, சரீரம் விழுதலும் குறிகளாம். இது சித்தாந்தசாராவலி வியாக்கியானத்திற் கண்டது.

‡ சிவபுண்ணியம் பத்திகாரணமாக உண்மையாகச்செய்வதும் புகழ்முதலிய உலகப்பயனை நோக்கிச்செய்வதுமென இருவகைப்படும். இவ்விரண்டும் சரியையும் கிரியையும் யோகமும் அவற்றானிகழும் ஞானமுமென ஒரோவொன்று நந்நான்காய் அந்நான்கினுள்ளும் சரியையிற் சரியை, கிரியை, யோகம், ஞானம், கிரியையிற் சரியை, கிரியை, யோகம், ஞானம், யோகத்திற்சரியை, கிரியை, யோகம், ஞானம், ஞானத்திற்சரியை, கிரியை, யோகம், ஞானமென ஒரோவொன்று நந்நான்காய் முப்பத்திரண்டு வகைப்பட்டு விரியால் இன்னும் பலதிறப்படுமென்று உணர்க.



நசித்து ஒன்றின் உள்ளம் நசித்தலால் ஒன்றா நசித்திலதேல் ஒன்று ஆவது இல்லை - அரன்கழல் செல்லுங்கால் அதனை ஆன்மாக் கெட்டொன்றுமோ கெடாதொன்றுமோவெனக் கடாயினார்க்குக் கெட்டொன்றுமெனின், ஆன்மாக்கெட்டுப்போகலான் ஒன்ற மாட்டாது கெடாதொன்றுமெனிற் கெடாதவழி இருபொருளாய் நிற்றலின் ஒன்றாமாறில்லை. ஆகலான் அருத்தாபத்தியளவையானே,—அப்பு அணைந்த உப்பின் மலம் நசித்து உளம் ஈசன் கழல் அணைந்து சேடம் ஆம் - உப்புத் தனது கண்டிப்பு நீங்கி நீரின் ஒன்றாமாறு போலத் தனது சகசமலங்கெட்டொழிய ஆன்மா அரன் கழலையொன்றி அவ்வரன்கழற்குச் சேடமாம்,—கப்பு இன்று ஆம் - அங்ஙனஞ் சேடமாகிய ஆன்மாவுக்கு மீளக் கவர்ச்சியில்லை.

யாதொன்று யாதொன்றன்பொருட்டேயாய்த் தனக்கெனச் சுதந்திரமின்றிநிற்கும் அஃததற்குச் சேடமென்பதறிக. "அவையுடைமை யாளாநா மங்கு" எனவோதுதலின், ஏனைப்பசுபாசங்கள் முதல்வனுக்குப் பொதுவகையாற் சேடமாயினும் இதுபோலச் சிறப்பு வகையாற் சேடமாதலின்மையின் இதனை வேறெடுத்தோதினார். முத்திநிலைகூறி முடிந்தமையின் இறுதிக்கட் கப்பின்றாமென அவினாவிருத்தியுங் கூறினார்.

பொன்வாள்முன் கொண்மூவில் புக்கொடுங்கிப்போய் அகலத்
தன்வாளே எங்குமாம் தன்மைபோல்—முன்வாள்
மலத்துள் மறைந்துள்ள மற்றுலகை உண்ணும்
மலத்திரித்துச் செல்லும் வரத்து.

உ—நான்காஞ்சூத்திரமுதல் இதுவரையிற் கூறிப்போந்த கேவலசகல சுத்தமென்னும் முத்திறத்தவத்தைகளினும் ஆன்மாத் தன்னியல்பிற்குக் கேடின்றியே நிற்குமென்பது உவமையின் வைத்துக்காட்டி மேலதனை வலியுறுத்துத னுதலிற்று.

பொன்வாள் முன் கொண்மூவில் புக்கு - ஞாயிறு காலைப்போதின் முகிற்படலத்துண் மறைந்து,—ஒடுங்கி - அம்முகிற்படலம் ஒருபுடை நீங்கியவழித் தன்னொளி ஏகதேசமாய் ஒடுங்கித்தோன்றி,—போய் அகல எங்கும் தன் வாளே ஆம் தன்மைபோல் - அம்முகிற்படலம் பெருங் காற்றானடியுண்டு முழுவதும் விட்டொழிந்தவழி எங்கணுந் தன்னொளியேயாய்த் தோன்றும் பெற்றிபோல,—உள்ளம்

முன் வாள் மலத்துள் மறைந்து - ஆன்மா அநாதியே தன்னறிவு மலத்துண் மறைப்புண்டு கேவலப்பட்டு,—மற்று உலகை உண்ணும் - பின்பு கருவிகளோடு கூடி ஏகதேசமாய் அறிவு விளங்கி ஐம்புலன்களை விடயிக்கும்,—(மற்று) மலத்து இரித்து வாத்துச் செல்லும் - பின்பு அம்மலத்தை முதல்வனருளாற் பற்றறக்களைந்து வியாபகமாய் அறிவு விளங்கி அவனது சீபாதத்தையணைந்து சுத்தப்படும்.

தன்மையென்றார் கொண்மூவிற் புக்குழியுங் கேடின்மையின் அறிவு மறைந்தும் ஒடுங்கியும் மறைப்பு நீங்கியே எங்குமாய் நிகழ்தன் மாத்திரைக்கே பொன்வாளுவமையென்பார், உலகையுண்ணும் வாத்துச் செல்லுமென வேற்றுமையும் உடன் கூறினார். மலநசித்தலாவது தனது மறைத்தற் சத்தி மடங்கிக் கீழ்ப்படுதன் மாத்திரையே பிறிதன்றென்பதூஉம் உவமையாற் பெறுதும்.

---

## பன்னிரண்டாஞ் சூத்திரம்

செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா
அம்மலம்கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயமும் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரனெனத் தொழுமே.

சூ—அசிந்திதனாய் நின்ற பதியைச் சிந்திதனாகக் கண்டு வழிபடுமாறுணர்த்துதனுதலிற்று.

சூத்திரக்கருத்துணர்த்துதனுதலிற்று.

அயராவன்பினரன்கழல் சென்ற முத்தர்க்குச் சீவன்முத்திநிலைக்கண் அவ்வறிவிச்சை செயல்கள் ஒரோவழிப் புறத்துச் செல்லுங்கால் அவை செல்லுமிடம் இவையென்பதுணர்த்து முகத்தான் வாக்குமனாதீதமாய்ப் பத்தியினான் மறவாதேத்த நின்ற முதல்வனை வாக்குமனக் கோசரமாம்படி தெளியக்கண்டு வழிபடுமாறுணர்த்துதல் இப்பன்னிரண்டாஞ் சூத்திரத்தின் கருத்து.

சூத்திரவியையும் இனிது விளங்கும்.

இச்சூத்திரத்தின் பிண்டப்பொழிப்பு :—

அயராவன்பினரன்கழலடைந்த சீவன்முத்தனாவான் செங்கமலமலர்போல விரிந்து விளங்கிய முதல்வனது நோன்றாளை அணைய



வொட்டாது அயர்த்தலைச் செய்விக்கும் அவ்வியல்பினையுடைய மும்மலவழுக்கை ஞானநீராற் கழுவி அங்ஙனம் அயராவன்பு செய்யு மெய்ஞ்ஞானிகளோடு கலந்து கூடி மலமயக்க நீங்குதலான் அன்புமிக்குடைய அவரது திருவேடத்தையுஞ் சிவாலயத்தையும் முதல்வனெனவே கண்டு வழிபட்டு வாழும்.

எழுவாய் மேலைச்சூத்திரத்தினின்றும் வருவிக்கப்பட்டது. சீவன்முத்தனென்பது ஏற்புழிக்கோடலாற் பெறுதும். நோன்றாள் வினைத்தொகை. நோன்றல் பொறுத்தல். *"எடுத்துச் சுமப்பானை" என்றார் புடைநூலாசிரியரும். மாலறநேய மலிந்தவரென்றது அம்மலங்கழீஇயன்பரொடு மரீஇயினாரென்னும் பொருள்தந்து சுட்டுப்பெயர் மாத்திரையாய் நின்றது. நேயமலிதல் கூறவே, வழிபாடும் பெறப்படும். அம்மலங்கழீஇ யென்றதனால் அறிவு வியாபரிக்குமிடமும், அன்பரொடு மரீஇ என்றதனால் இச்சை வியாபரிக்கு மிடமும் தொழுமென்றதனாற் செயல் வியாபரிக்குமிடமும் பெறப்பட்டன. படவே, சீவன்முத்தர்க்கு அறிவிச்சைசெயல்கள் ஏனை விடயங்களிற் செல்லாவென்பதூஉம் பெறப்பட்டது. இம்மூன்றும் பிரிப்பின்றி ஒரிடத்தொருங்கு நிகழ்வனவாகலின், விடயவேற்றுமை யின்மையு முணர்க.

தொழுகவென்னாது தொழுமென்றமையின், இஃதணைந்தோரது தன்மையென்பது பெற்றாம். அற்றாகலினன்றே இதனைச்சாதனவோத்தின் வையாது ஈண்டு வைத்தாரென்பது. இனித் தொழுமென்றதனை இரட்டுறமொழிந்து கொண்டு விகுதிப் பொருள்பட நின்ற முன்னிலையேவலாக்கியு முரைத்துக்கொள்க. என்னை? செல்வப்பெருக்கமுடையார்க்கு உணவாகிய ஆன்பால் உடம்பு நோயின்றி வளரச்செய்யும் மருந்துமாதல்போல, இவ்வழிபாடு மலவாசனை சிறிதுந் தாக்குதலின்றிச் சிவானந்தம் மேன்மேல் வளரச்செய்யுஞ் சாதனமாதலு முடைமையின், கண்ணழித்துரைபற்றி விதியாகவைத்துரைத்தலும், அதுபற்றி.

இதனுள், செம்மலர் நோன்றாள் சேரலொட்டா அம்மலங்கழீஇயென்றது ஓரதிகரணம்; அன்பரொடு மரீஇயென்றது ஓரதிகரணம்; மாலறநேய மலிந்தவர்வேடமும் ஆலயந்தானும் அரனெனத்

---

* திருவருட்பயன், உயிர் விளக்கம். ௫. கிடைக்க.

தொழுமேயென்றது ஓரதிகரணம்; ஆக மூன்றதிகரணத்தது இச்சூத்திரமென்றுணர்க.

## முதலதிகரணம்

ஈண்டு ஆணவ மாயை கான்மிய மென்னு மலங்களைக் களைகவென்றது.

**மே**—சீவன்முத்தர்க்கு ஒருதலையான் முன்னர்ச் செய்யக்கடவதிதுவெனச் சூத்திரத்தின் முதற்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று. கன்மமலமே தன் மூலத்தை நோக்கிக் கான்மியமெனவும்படும். காமியமெனப் பாடமோதி, ஆகாமியங் காமியமெனத் தலைக்குறையென் றுரைப்பாருமுளர்.

அவை தாம் ஞானத்தை யுணர்த்தாது அஞ்ஞானத்தை யுணர்த்துமாகலான்.

**ஏ**—"மலமாயை தன்னொடு வல்வினை யின்றே" எனப் பாச நீக்கம் மேலே பெறப்பட்டமையின், மெய்யுணர்ந்து நிட்டை கூடியபின் அவை களையக்கிடத்தல் யாங்ஙனமென்பாரை நோக்கிச் சூத்திரத்தின் உடம்பொடு புணர்த்தோதிய பொருளைத் தெரித்துணர்த்தி மேற்கோளைச் சாதித்தனுதலிற்று. அம்மலங்கண் மூன்றும் மெய்யுணர்ந்து நிட்டைகூடினோர் மாட்டும் யாதானுமோராற்றா னுழைந்து தம்மெய்யுணர்வைக் கீழ்ப்படுத்துப் பிறவிக்கு வித்தாகிய பண்டை விபரீதவுணர்வை மேற்படுத்துவனவாம் ஆகலான் அஃதவர்க்காகாமையின் ஈண்டு ஆணவமாயை கான்மியமென்னு மலங்களைக் களைகவென மேற்கொண்டது. உணர்த்துதல் உணர்விற்கேதுவாதல். ஈண்டு அஞ்ஞானமென்றது விபரீதவுணர்வை.

> புண்ணிய பாவம் பொருந்தும்இக் கான்மியமும்
> மண்முதல் மாயைகாண் மாயையும்—கண்ணிய
> அஞ்ஞானம் காட்டும்இவ் வாணவமும் இம்மூன்றும்
> மெய்ஞ்ஞானிக் காகா விடு.

**உ**—அவை அஞ்ஞானத்திற்கேதுவாய் வந்து நுழையுமாறும் அஃது அவர்க்காகாமையுந் தெரித்துணர்த்தி ஏதுவை வலியுறுத்த னுதலிற்று.



புண்ணிய பாவம் பொருந்தும் இக்கான்மியமும் - புண்ணிய பாவப்பயனும் புண்ணியபாவகாரணமாயும் பொருந்துகின்ற இக் கன்மமலமும்,—மண் முதல் ம்ாயை காண் மாயையும் - நிலமுதல் மோகினியீறாகக் காணப்படுகின்ற இம்மாயாமலமும்,—கண்ணிய அஞ்ஞானங் காட்டும் இவ்வாணவமும் - சுட்டியறிவதாகிய விபரீதவுணர்வைப் பயக்கும் இவ்வாணவமலமும்,—இம்மூன்றும் மெய்ஞ்ஞானிக்கு ஆகா விடு - இம்மலங்கண் மூன்றும் மெய்யுணர்வுடைய உனக்காகாமையான் அவற்றை விடுத்தொழிவாயாக.

எல்லா மலங்களும் பற்றறத் துடைத்து மெய்யுணர்ந்து நிட்டை கூடினோர்க்கு உடம்பு நிற்குமளவும் பிராரத்தவினை அவ்வுடம்பைப் பற்றி நிற்றலான் அஃது அவர்க்கு ஒரோவழி வாசனை வயத்தான் இங்குளி வாங்குங் கலம்போல வந்து தாக்கும்; அவ்வழிப், *"பிற்செயா தநுபவிப்ப தின்று" ஆகலின் அது சார்வாக விருப்பு வெறுப்புக்கள் உளவாம்; அவை உளவாகவே, பரமே பார்த்திருப்பார்க்கு நிலமுதலிய ஏகதேசப்பொருள் காட்சிப்படும்; படவே, அவற்றைச் சுட்டியறிவதாகிய விபரீதவுணர்வு மேற்பட்டு மெய்யுணர்வைக் கீழ்ப்படுத்துப் பிறவிக்கு வித்தாம்: இவ்வாறிம்மூன்றும் அறிவற்றம் பார்த்து இம்முறையானே வந்து தலைப்படுமெனக் காட்டிக் கூறுவார் கன்மமாயை யாணவமென்றிம்முறையின் வைத்து அவ்வக் காரிய நிகழ்ச்சிகளை யெடுத்தோதிச் சுட்டிக் கூறினார்.

புண்ணியபாவமென்றது உபசாரம். முன் வந்த மாயை மூப்பத்தொராமெண்ணு முறைமைக்கணின்ற தத்துவத்தை யுணர்த்தி விடாதவாகுபெயராய்த் தன்னையீறாகவுடைய ஏனைத் தத்துவங்களை யுந்தழீஇயிற்று. காண்மாயை செயப்படுபொருளோடு முடிந்த வினைத்தொகை.

இவை சிவபோகப் பெருவாழ்வை யிழப்பித்தலின் மெய்ஞ்ஞானிக்காகாவாயின. மேன்மேன் முறுகுவனவாய இவற்றைத் தோன்றும்பொழுதே துடையாக்கால் †"களைகுநர் கைகொல்லுங் காழ்த்த விடத்து" என்னு முறைமைத்தாய் முடியுமென்பதுபற்றி

---

* சிவஞானசித்தியார், இரண்டாஞ்சூத்திரம். ௧௧. முற்செயல் விதியை.

† திருக்குறள், பகைத்திறந்தெரிதல். ௯. இளைதாக.

விடுவன ஈண்டும் வலியுறுத்தப்பட்டது. விடுதலாவது, அவை அம்முறையானிகழ்ந்தவழி இவ்வஞ்ஞானம் ஏகதேசக்காட்சியானுயதெனவும், அக்காட்சி விருப்பு வெறுப்புக்களது தோற்றத்தானுயதெனவும், அத்தோற்றமும் பிராரத்த வினைநுகர்ச்சிக்கட்சென்ற தற்போதத்தாலாயதெனவும், அறிந்து அங்ஙனஞ் செல்வதாகிய தற்போதம்முளையாதவாறு பரிகரித்துச் சிவஞானத்துளடங்கிச் "சிவாநுபவம் சுவாநுபூதி"யாம்படி ஞான நிலையில் உறைத்துநிற்றல். மாயைகன்மங்கள் அஞ்ஞானங்காட்டுதல் ஆணவமலச்சார்வானுயசெயற்கை யென்பதுணர்த்துதற்கு, மூன்றற்கும் பொதுவாக எதுவுட்கூறிப் போந்தவதனை ஈண்டாணவமாத்திரைக்கே சிறந்தெடுத்தோதினர்.

## இரண்டாமதிகரணம்

இனிச் சிவபத்தர்களோ டிணங்குக வென்றது.

மே—அம்மலங் கழீஇயினூர்க்கு அதனை நிலைபெறுத்துவதாய் அதன்பின்னர்ச் செய்யக்கடவது இதுவெனச் சூத்திரத்தின் இரண்டாங்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று. ஈண்டுச் சிவபத்தரென்றது பத்தியினுன் மறவாதேத்தி முதல்வனது சீபாதத்தையணைந்த சீவன்முத்தர்மேற்று. இணங்குதல் நட்புச்செய்தல். சிவபத்தர்களோடிணங்கவெனவே, எதிர்மறை முகத்தான் ஏனையரோடிணங்கற்க வென்பதூஉம் பெறப்பட்டது.

அல்லாதார் அஞ்ஞானத்தை யுணர்த்துவராகலான்.

ஏ—உறவும் பகையுமொழித்த மெய்ஞ்ஞானிகள் சிலர்மாட்டு நட்புஞ் சிலர்மாட்டு நட்பின்மையுமுடையராதல் சால்பன்றென்பாரைநோக்கி மேற்கோளைச் சாதித்தனுதலிற்று. அல்லாதார் அஞ்ஞானத்தையுணர்த்துமாறு *"தெய்வ மென்பதோர் சித்தமுண்டாகி—முனிவி லாததோர் பொருளது கருதலு—மாறு கோடி மாயா சத்திகள்—வேறு வேறுதம் மாயைக டொடங்கின—வாத்த மானுரயலவர் கூடி—நாத்திகம் பேசி நாத்தழும் பேறினர்—சுற்ற மென்னுந் தொல்பசுக் குழாங்கள்—பற்றி யழைத்துப் பதறினர் பெருகவும் விரத மேபர மாகவே தியருஞ்—சரத மாகவே சாத்திரங் காட்டினர்—சமய வாதிக டத்த மதங்களே—யமைவ தாக வரற்றி மலைந்தனர்" என்றற்றொடக்கத்துத் திருவாக்குக்களானறிக. மும்மலங்கள் அஞ்ஞானத்தை யுணர்த்துதல் இலக்குவாய்த்துழி ஏதுவாதன்மாத்திரையே சிவபத்தரல்லாதார் அவ்வாறன்றி இலக்கு வாயாதவழியும் வாய்க்குமாறு செய்துகொண்டு பலவகை யுபாயங்களானுந் தம்மோடொப்ப விபரீதவுணர்வைச் செலுத்தியே விடுவராகலான் அம்மலங்களினுங் கொடியராகிய இவரை அவற்றினுமஞ்சிவிட்டொழிதலே அறிவுடைமைக்குச் சால்பென்பதாம்.

* திருவாசகம், போற்றித்திருவகவல். ௪௨ - ௫௩.



மறப்பித்துத் தம்மை மலங்களின் வீழ்க்கும்
சிறப்பில்லார் தந்திறத்துச் சேர்வை—அறப்பித்துப்
பத்தர் இனத்தாய்ப் பரனுணர்வி னுலுணரும்
மெய்த்தவரை மேவா வினை.

உ—அஞ்ஞானத்தை யுணர்த்துமவரோடு இணங்காமைமாத்திரையேயமையும் சிவபத்தர்களோடிணங்குதல் எற்றுக்கென்பாரைநோக்கி அதனை வலியுறுத்துதனுதலிற்று.

தம்மை மறப்பித்து மலங்களின் வீழ்க்கும் சிறப்பு இல்லார்தம் திறத்துச் சேர்வை அற - முதல்வன் காட்டியுங்கண்டும் உபகரித்து நிற்கும் அத்துவிதநிலையை மறவாது கடைப்பிடிக்குந் தமது ஞானக் கண்ணை யிழப்பித்துத் தீய நெறிக்கட் கொண்டு சென்று மலங்களானுய பிறவிக்குழியில் வீழ்வித்துத் துயருறுத்துவாராகிய அன்பில்லார் கூற்றிலே தொன்றுதொட்டுப் பயின்று வந்த சேர்ச்சியறும்படி,—பத்தர் இனத்துப் பித்து ஆய்ப் பரன் உணர்வினுல் உணரும் மெய்த்தவரை - அம்மறவியை மாற்றி ஞானக் கண்ணையுதவிப் பிறவிக் குழியினின்று மெடுத்து நன்னெறிக்கட் செலுத்தி வாழ்விக்குஞ் சிவபத்தரது கூற்றிலே பேரன்புடையராய் அவ்வன்பு சார்பாக விளங்குஞ் சிவஞானக் கண்ணுல் அந்நிலை கடைப்பிடித்துணரப்பெற்ற மெய்த்தவராயினுரை,—வினை மேவா - எல்லா வருத்தங்கட்கும் மூலமாய் வந்து சிறப்பில்லார் தந்திறத்துச் சேர்வையைப் பயப்பிக்கும் பிராரத்தவினைகள் வாதியா.

மறப்பித்துத் தம்மை மலங்களின் வீழ்க்குஞ் சிறப்பில்லாரென மேற்சொல்லிய பொருளையே அநுவதித்து விரித்தோதினுர்; அத

னெதிர்மறை முகத்தாற் சிவபத்தராது பெருந்தகைமை யுணர்த்
கோடற்பயனோக்கி. வீழ்க்குமென்றது உருவகங்குறித்து நிற்றலின்,
அவ்வாறுரைக்கப்பட்டது. எல்லாவற்றினும் அன்பு சிறந்தமையின்
அதனைச் சிறப்பென்றார். பித்துப்போறலின் அன்பு பித்தெனப்பட்
டது ஏனைத்தவங்களெல்லாம் மெய்யாதலின்றி மலநடையாய்ப்
போதலின், பரனுணர்வினாலுணருந் தவமொன்றே மெய்த்தவ
மெனப்பட்டது.

வினை பால்பகாவஃறிணைப்பெயர். சிவபத்தர்மாட் டன்புடைய
ராய் மனஞ் சொற்செய்கைகளான் அவர்வழி நிற்பார்க்கு உலகிய
லுணர்வு மாறிச் சிவாநுபூதியுணர்வே மேம்பட்டு நிகழும்: அது நிக
ழவே பௌதிகவுடம்பைப்பற்றி வரும் பிராரத்தவினைகள் அவர்க்கு
நுகர்ச்சியாதல் செல்லாமையின் வாதிக்கமாட்டா: மாட்டாதொழி
யவே, அவை பற்றுக்கோடாக நிகழுஞ் சிறப்பில்லார்தஞ் திறத்துச்
சேர்வை பற்றறக் கெடுமென்பார் 'சேர்வை யறப்பித்துப் பத்தரினத்
தாய்ப் பரனுணர்வி னாலுணரு மெய்த்தவரை மேவா வினை'யென்றார்.
எனவே, வீட்டுணர்வை நிலைபெறுத்துஞ் சிவபத்தர்களோ டிணங்
கினாலன்றி வினை பற்றுக்கோடாகத் தொன்றுதொட்டுப் பயின்று
வந்த சிறப்பில்லாரதிணக்கம் அறுமையின், அவ்விணக்கம் ஒருதலை
யான் வேண்டுமென வலியுறுத்தவாறாயிற்று.

## மூன்றுமதிகரணம்

இனிப் பத்தராது திருவேடத்தையுஞ் சிவாலயத்தை
யும் பரமேசுரனெனக்கண்டு வழிபடுக வென்றது.

மே—அன்பரொடு மரீஇயினார்க்கு அம்மருவுதலை நிலைபெறுத்
துவதாய் அதன்பின்னர்ச் செய்யக்கடவதிதுவெனச் சூத்திரத்தின்
மூன்றுங்கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று.

காண்டல் ஐயுறவின்றித் தெளிதல். காமக்கிழத்தியர் வடிவிற்
காணப்படும் ஆடைசாந்தணிகலன்முதலாயின காமுகரை வசீகரித்து
இன்பஞ்செய்யுமாறு போல மெய்யுணர்வுடையாரைக் காட்சிமாத்
திரையின் வசீகரித்து இன்பஞ்செய்தல்பற்றித் திருவேடத்தையுஞ்
சிவாலயத்தையு மென்றுபசரித்தார். அது *"தேவுந் தயலுந் திளைக்

* திருப்பல்லாண்டு - அ.

னும் ஆற்ற இனிமையாகச் செய்தார்கள். பின்னர், சைவச் செல்வா கள், குரு. வேலுசாமி, பி. நடராசன் என்பவர்கள் ஆத்திகம் நாத்திகம் என்பது பொருளாக உரையாடினார்கள். பின்னர் தலைவரவர்கள் பல சிறந்த சைவக் கருத்துக்களோடு ஒவ்வொரு சைவரும் நமது சமயத்தில், உண்மை உணர்வும், அன்பும், ஜீவகாருண்யமும், வீரமும் பூண்டு ஒழுகுவாரானால் இம்மை மறுமை வீடு என்ற மும்மைப் பேற்றையும்பெற்றுய்வார்கள் என்பனபற்றி அவையோர்அவா மேலிடுமாறு நிறைவுரை செய்தார்கள். பின்னர் வந்தனோபசாரத்தோடு சபை இனிது நிறைவெய்தியது. அன்றிரவு 11 மணிக்குமேல் அப்பரடிகள் திருவுலாக் காட்சி முத்து விமானத்தில் தமிழ்மறைக் கூட்டங்களும் மேளவாத்தியக் குழாங்களும் தனித்தனி முழங்கிவர நடந்தேறியது.

---

## கோவூருக்கு ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் வருகை

கோவூரில் ஸ்ரீ சுந்தரேசுவர சுவாமிகட்கு 9 5-35 முதல் நடைபெறும் திருவிழாவில் ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் 13-5-35 முதல், நாடோறும் மாலையில் சொற்பொழிவுகள் நிகழ்த்துவார்கள். பிறகு ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் சென்னைக்கு வருவார்கள் என்று பல அன்பர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

---

## சிவப்பிரகாச வகுப்பு

இவ்வகுப்பு கோடை விடுமுறைக்காக 5-5-35 முதல் நிறுத்தப்பட்டுள்ளது. இதுவரையில் பதின்மூன்று வாரங்களில் பாடம் நடைபெற்றுள்ளது. மீண்டும் வகுப்பு தொடங்கப்படும் விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

---

## கோடை விடுமுறை

நமது சமாஜ ஆபீசு கோடை விடுமுறைக்காக 9 5-35 முதல் 22-7-35 வரையில் மூடப்படும். புத்தகங்களனுப்புதல், பழைய பத்திரிகைகளனுப்புதல் முதலியன 22-7-35க்குப் பிறகுதான் கவனிக்கப்படும். இவ்விடுமுறையில் புத்தகங்களை அவசரமாகவும் அவசியமாகவும் பெற விரும்புவோர் 'முருகவேள் புத்தகசாலை, 12, கணபதி முதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை' என்ற விலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.

Registered No. 2330. "SIDDHANTHAM" Vol. 8. No. 5

உ

சிவமயம்

**வெளி வந்துவிட்டன!** **வெளி வந்துவிட்டன!**

# சுந்தரர் தேவாரம் (இரண்டாம் பதிப்பு)

மூலம், பைகா பெரிய எழுத்திலும், முக்கிய பகுதிகள் தடித்த எழுத்திலும், பதிகங்கள் சரித்திரமுறையிலும் அச்சிடப்பட்டுள்ளன. சுந்தரமூர்த்தி சுவாமிகள் சரித்திரம் விரிவாக எழுதப்பட்டு பெரிய புராண ஆதாரச் செய்யுள்களும் கொடுக்கப்பட்டுள்ளன. அரும்பதவுரைக் குறிப்பு, விஷய அகராதி முதலியனவும் இப்பதிப்பின் சிறப்புக்களாகும். 372 பக்கம், முழுக் கலிக்கோ பைண்டு; நல்ல கிளேஸ் காகிதம்.

**தனிப் பிரதி விலை அணா 12. ரிஜிஸ்தர் தபாற் கூலி அணா 7.**
**ஆறு பிரதிகள் விலை ரூபா 4. தபாற்கூலி வேறு.**

---

# அப்பர் தேவாரம் (இரண்டாம் பதிப்பு)

மூலம் பைகா பெரிய எழுத்து; முக்கிய பகுதிகள் தடித்த எழுத்து; பதிகங்கட்கு எண்; பாசுரங்கட்குத் தொடர்ச்சி எண்; சரித்திரம்; சரித்திர முறைப் பதிக அட்டவணை; அரும்பொருளகராதி; ஆராய்ச்சிக் குறிப்புகள் முதலிய சிறப்புகள் வாய்ந்த இப்பதிப்பு நல்ல கிளேஸ் காகிதத்தில் 600 பக்கங்களுக்குமேல் அச்சிடப்பெற்று முழுக் கலிக்கோ பைண்டு செய்யப்பட்டுள்ளது.

**தனிப் பிரதி விலை ரூபா ஒன்று. ரிஜிஸ்தர் தபாற்கூலி அணா 8.**
**பதினொரு பிரதிகள் விலை ரூபா பத்து. தபாற்கூலி வேறு.**

---

Printed by T.V. Volaganathan at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah and Published by M. Balasubramania Mudaliar (Editor-in-charge) for the Saiva Siddhanta Maha Samajam, at "Thiruvarulagam", 22-A, Kallukaran Street, Mylapore, Madras.